பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 09 வெள்ளிக்கிழமை (22.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :147

# இறுதித் தீர்வு பற்றிப் பேச முன் பொதுக்கட்டமைப்பு எதற்காக?

## அவசியமற்றது என்கிறார் பதில் பிரதமர் ரட்ணசிறி

கொழும்பு, ஏப்ரல் 22

**"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காகப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து அரசு ஓர் இறுதிமுடிவுக்கு இன்னும் வரவில்லை. இப்போதைய நிலையில் அது ஒரு யோசனைத் திட்டம்தான்.**

**"இறுதித் தீர்வுக்குச் செல்லும் வழிவகைகளைப் பார்த்த பின்னரே பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். எனவே, இறுதித்தீர்வு குறித்தே பேசவேண்டும். அதன் பின்னர் படிப்படியாக இவ்விடயத்தைச் செய்யலாம். இறுதித் தீர்வு பற்றிப் பேசாமல் இதனைச்செய்வது முறையல்ல".**

**- இவ்வாறு கூறுகின்றார் பதில் பிரதமரும், பதில் பாதுகாப்பு அமைச்சரும், பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, பௌத்த சாசன அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க.**

உதயனுக்குத் தாம் வழங்கிய பிரத்தியேகச் செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக அப்பேட்டியில் அவர் தெரிவித்த கருத்துக்களின் விவரம் வருமாறு-

★ கே:- பொதுக்கட்டமைப்பு விவகாரமே இப்போதைய அரசியலில் சூடுபிடித்துள்ளது. இதன் நிலைமை என்ன?

✪ ரட்ணசிறி:- இதன் பிந்திய - இறுதி - நிலை எனக்குத் தெரியாது. சொல்ஹெய்ம் ஐயா புதிய யோசனைகளை எடுத்து வந்துள்ளார் என்று தானே கூறுகிறார்கள்? அது சரியா என்பது எமக்குத் தெரியவில்லை. ஜனாதிபதி வந்தவுடன் தான் இதன் முழுவிவரம் தெரியவரும்.

★ கே:- ஆனாலும் பொதுக்கட்டமைப்பை அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்து வருகிறதே?

✪ ரட்ணசிறி:- அரசினுள் மட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் இதனை எதிர்க்கிறாரே? முன்னாள் எம்.பியான ஆனந்த சங்கரி இதனை வன்மையாக எதிர்க்கிறார். விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள் என நினைக்காதீர்கள். தமிழ் மக்களைப் பல்வேறு தரப்பினரும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். சுயாதீனக் கொள்கை கொண்டவர்களும் இருக்கின்றார்கள். இந்தத் தற்காலிக ஏற்பாடுகளுக்கு (பொதுக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சிக்குடிச்சாறில் உயிரிழப்புகளா? மறுக்கின்றனர் புலிகள்

அம்பாறை.ஏப்.22

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்கிழக்குக் காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையில் நேற்று மோதல் சம்பவம் இடம்பெற்றது என்று இராணுவத் தரப்பு வெளியிட்ட தகவல் முழுப்பொய் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

வட்டமடுப் பிரதேசத்தில் உள்ள புலிகளின் நிலை மீது கருணா குழுவினர் நேற்று மேற்கொண்ட தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர்; 7 பேர் காயமடைந்தனர் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்கள் அனைவரும் புலிகளின் உறுப்பினர்கள் என்றும் இராணுவத்தினர் தெரிவித்தனர் .

இதனை 'வழமையான பொய்யும் புரட்டும்' - என்றும் அடியோடு மறுத்துள்ளார் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மூத்த தளபதி ஒரு

(18ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தை விட்டு ஓடியோர் சட்டப்படி விலகுவதற்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப்.22

கடந்த 20முதல் 25ஆண்டு காலப்பகுதிக்குள் இராணுவத்திலிருந்து ஓடிச்சென்றவர்கள் சட்டப்படி விலகிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன்மூலம் இத்தகைய 80ஆயிரம் இராணுவத்தினர் தமது சேவையிலிருந்து சட்டப்பூர்வமாக விலகச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அறிவிக்கும் செய்தியாளர் மாநாடொன்று கொழும்பில் உள்ள இராணுவத்தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்ணாயக்க புதிய திட்டம் பற்றி விளக்கினார்.

சுமார் 20 தொடக்கம் 25 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குள் கடமையில் இருந்து நின்ற இராணுவ வீரர்கள் சட்டப்படி விலகக் கூடிய வாய்ப்பை இலங்கை இராணுவம் வழங்கியுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி நேற்று இரு இடங்களில் ஆர்ப்பாட்டப் பேரணிகள்

யாழ்ப்பாணம்.ஏப்.22

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தியும், கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும், உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கக் கோரியும் தீவகம் மற்றும் சண்டிலிப்பாய் பகுதிகளில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன.

பிரதேச பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் பேரணிகள் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

தீவகத்தில்

தீவகப் பொது அமைப்புகளின் ஒன்றியமும் தீவக நலன் காப்பகமும் இணைந்து ஏற்பாடு செய்த

(18ஆம் பக்கம் பார்க்க)

மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்



வேலணையில்...



சண்டிலிப்பாயில்...

## அரசு கவிழலாம் அல்லது பொதுத்தேர்தல் வரலாம்

## ஐ.தே.கட்சி பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் முன்னறிவிப்பு

கொழும்பு.ஏப்.22

ஜே.வி.பியினரின் கெடுபிடிகளால் அரசு எந்த நேரத்திலும் கவிழ்ந்து விடலாம். சிலவேளை இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத்தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி உத்தரவிடுவார் என்று முன்னறிவிப்பு விடுக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

அக்கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இப்போது உறுதியான நிர்வாகம் இல்லை மாலுமி இல்லாத கப்பல் போன்று தத்தளிக்கின்றது அரசு. ஜே.வி.பியினரின் கெடுபிடிகளினால் அரசு எந்த நேரத்திலும் கவிழ்ந்து

(18ஆம் பக்கம் பார்க்க)

## மேதினப் பேரணியை பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஏப்.22

'தமிழ்த் தேசிய உழைப்பாளர் உரிமையுடன் உயர ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் குடாநாட்டில் இம்முறை மேதினநிகழ்வுகள் மிகவும் பிரமாண்டமான அளவில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுப்பிற்பகல் யாழ்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சொல்ஹெய்மை வைகிறார் சங்கரியார்!

### புலிகளைத் திட்டித் தூதரகங்களுக்குக் கடிதம்

கொழும்பு.ஏப்.22

விடுதலைப் புலிகளைத் திட்டித் தீர்த்தும், அமைதி முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் எரிக் சொல்ஹெய்மை வைதும் ஆறு பக்கக் கடிதம் ஒன்றை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும், இராஜதந்திரிகளுக்கும், அரசியல் பிரமுகர்களுக்கும் அனுப்பிவைத்திருக்கின்றார் வீ.ஆனந்தசங்கரியார்.

தம்மை சிரேஷ்ட தமிழ்க் குடிமகன் என்றும், அரசியலில் 45 வருடங்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருபவர் என்றும், 17 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர் என்றும் குறிப்பிட்டு -

(18ஆம் பக்கம் பார்க்க)

## கடலிலும் எல்லை வரைய வேண்டும்! கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் கோரிக்கை

திருகோணமலை.ஏப்.22

திருகோணமலை மாவட்டத்தில் புலிகள் மற்றும் கடற்படையினரின் கடல் நடமாட்டம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண கடலிலும் எல்லைகள் வரையறை செய்யப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கும் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமாலை 3.30 மணியளவில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அப்போதே எழிலனால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கடல் நடமாட்ட எல்லைகள் நிர்ணயிக்கப்படவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



சண்டிலிப்பாய், சங்கானைப் பிரதேச பொது அமைப்புகள் ஏற்பாடு செய்த கண்டனப் பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
கண்டனப் பேரணியின் இறுதியில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மாவிடம் சண்டிலிப்பாய்ப் பொது அமைப்புகள் ஒன்றியத் தலைவர் ஞா.பேர்னாட் மகஜரைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## மீன்பிடி தொடர்பான கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.22

மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீலங்கா தேசிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மகா சம்மேளனத்தால் அனைத்துக கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், இயக்குநர்கள், உறுப்பினர்கள ஆகியோருக்கான கருத்தமர்வு ஒன்று இன்று யாழ். கோயில் வீதியில் உள்ள யாழ். கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இக்கருத்தமர்வில் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரங்களை கட்டியெழுப்புவதற்காக தேசிய மட்டத்தில் ஒன்றிணைவதன் அவசியமும் அது தொடர்பான வேலைத திட்டமும் பற்றி ஆராயப்படவுள்ளது. (எ-12)

## யாழ். – முகமாலை இடையிலான மினிபஸ் சேவை மீண்டும் வழமைக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.22

முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தனியார் பஸ் சேவைகள் நேற்று வழமைக்குத் திரும்பின.

கடந்த சனிக்கிழமை இருபாலையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தையடுத்து, மினி பஸ் தீக்கிரையாக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் கடந்த நான்கு நாள்களாக சேவையில் ஈடுபடாமல் பகிஷ்கரித்து வந்தமை தெரிந்ததே. (எ-7)

## கத்தி வெட்டுக்கு இலக்காகி குடும்பப் பெண் மரணம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். புகையிரத நிலைய வீதிப் பகுதியில் இடம்பெற்ற கத்திவெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பப் பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் அங்கு மரணமானார்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்தவரான தவராஜா புளோரிடா வசந்தினி (வயது 29) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே மரணமானவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ். பொலீஸார் சந்தேகத்தின் பேரில் சூசைப்பிள்ளை சகாயராஜா என்பவரைத் கைதுசெய்துள்ளனர்.

மரண விசாரணையை யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா மேற்கொண்டார். மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளை அடுத்து சடலம் நேற்றுமாலை உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(சம்பவம் தொடர்பாக முன்னர் கிடைத்த செய்தி 10ஆம் பக்கத்தில்) (எ-12)

## நடமாடும் நூலக சேவைக்கென பொதுநூலகத்துக்கு இன்று பஸ்

### 'யுனெஸ்கோ' நிறுவனம் வழங்குகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.22

'யுனெஸ்கோ' நிறுவனத்தினால் யாழ். பொது நூலகத்திற்கு வழங்கப்பட்ட நடமாடும் நூலக சேவைக்கான பஸ் இன்று வெள்ளிக்கிழமை காலை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும் இந்தக் கையளிப்பு வைபவத்தில், 'யுனெஸ்கோ' பிரதம அதிகாரி ஆர்.பி.பெரேரா பஸ்ஸை உத்தியோகபூர்வமாகக் கையளிப்பார்.

யாழ். பொதுநூலக பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

மேற்படி பஸ் கையளிப்பு வைபவம் கடந்த 19ஆம் திகதி நடைபெறவிருந்தது. எனினும், தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்னர் இது பிற்போடப்பட்டது என்றும் - அவர் மேலும் கூறினார். (எ-7)

## கருணா குழு உறுப்பினர் நேற்று வாழைச்சேனையில் சுட்டுக்கொலை

வாழைச்சேனைப் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட கல்குடா வீதியில் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை நண்பகல் வேளையில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் கருணா குழுவைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

கல்லடி, உப்போடையைச் சேர்ந்த கிருபாகரன் என்பவரே சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவேளையில் மோட்டார் சைக்கிளில் இவரைப் பின்தொடர்ந்துவந்த இரண்டு இனந்தெரியாத இளைஞர்கள் இவர்மீது கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

தலையிலும் மார்புப் பகுதியிலும் துப்பாக்கிக்குண்டு பாய்ந்த நிலையில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். வாழைச்சேனை ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு அருகில் மக்கள் நடமாட்டம் நிறைந்த நண்பகல் வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று பொலீஸார் நேற்றுத் தெரிவித்தனர். எனினும், அவர் கருணா குழுவைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும், அவர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-3)

## வீரசிங்கம் மண்டபத்தில் பெண்கள் தினவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மகளிர் குழு நடத்தும் அனைத்துலகப் பெண்கள் தின விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவி திருமதி கௌசல்யா காந்தீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில்,

முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன், மாவட்ட மகளிர் குழு தலைவி திருமதி ரதி சோதிலிங்கம், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோ.கயல்விழி ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.கனகசபாபதி, யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம், தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பகுதியைச் சேர்ந்த பொ.புஸ்பகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறுவர் நிகழ்ச்சிகள், காவடி நடனம், நாடகம், கவிதை, வில்லிசை ஆகியன சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும். (எ-13)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.22

ஆனைக்கோட்டை, உயரப்புலம் அருளமிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய பெரும் திருவிழா கடந்த 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்றசவமும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணிகது 108 சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதியுலா வருதலும், அன்னதானமும் இடம்பெறவுள்ளன. (ஒ-203)

★ ★ ★

சுழிபுரம்,ஏப்.22

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய புதிய பிள்ளையார், முருகன் ஆலய் பிரதிஸ்டா கும்பாபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அத்துடன், புதிதாக அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுர கும்பாபிசேகமும் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து தினமும் கால் மண்டல காலத்திற்கு அபிஷேக பூசைகள் நடைபெறவுள்ளன. (ஒ-28-203)

★ ★ ★

குடத்தனை,ஏப்.22

வடமராட்சி தென்புலோலி மூச்சம்புலவு சிவன்கோயில் நூதன சந்திரசேகர மூர்த்தி பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (ஒ-78)

★ ★ ★

குடத்தனை,ஏப்.22

பருத்தித்துறை, மாதனை அருள்மிகு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக இராஜகோபுர குட முழுக்குப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (ஒ-78)

குடத்தனை,ஏப்.22

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்தின் புனராவர்த்தனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகப் பெரும் சாந்திப் பெருவிழா அடுத்த மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.(ஒ-78)

★ ★ ★

குடத்தனை,ஏப்.22

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகாபரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்தில் நாளை சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (ஒ-78-203)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஏப்.22

மாதகல், நுணசை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

உற்சவ தினங்களில் சைவப்புலவர் க.நித்தியதசீதரன் 'திருமுருகாற்றுப் படையுடைய குமரா' என்ற பொருளில் சொற்பொழிவாற்றி வருகின்றார். (ஒ-135-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.22

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய பார்த்திப வருட தசமதின லட்சார்ச்சனை நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த அர்ச்சனை நிகழ்வு தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. இந்த உற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 1008 சங்காபிசேகமும், மாலை லட்சநாமம் பூர்த்தியும் பஞ்சமுக விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் நடைபெறும். (ஒ-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.22

புங்குடுதீவு, மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிகளின் ஆலயத்துக்கு இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

தொழிலதிபர் விநாசித்தம்பி இராமநாதன் இராஜகோபுரத்திற்கு அடிக்கல்லை நட்டு வைக்கவுள்ளார். (ஒ-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.22

உடுப்பிட்டிச் சந்தி வல்லைவாளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ஒ-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.22

கொக்குவில், மாத்தனைக் கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக தினமான இன்று விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (ஒ-203)



ஆழிப்பேரலைப் புனரமைப்புப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி தீவுப்பகுதி மக்கள் நேற்று வேலணையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
வேலணைத் துறையூரிலிருந்து ஆரம்பமான பேரணி வேலணைப் பிரதேச செயலகம் நோக்கிச் செல்வதையும் -
வேலணைப் பிரதேச செயலகத்தில் வைத்து உதவிப் பிரதேச செயலர் எஸ்.நந்தகோபாலனிடம் தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகத்தின் தலைவர் ந.தனேந்திரன் மகஜரைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், ம.க.ஈழவேந்தன் ஆகியோர் இரண்டாவது படத்தில் உள்ளனர். (படங்கள்: பிரபா)

# அமைதிக்கு உழைத்தவரின் பெயரையே எனது பெயராகவும் சூட்டியுள்ளேன்

## பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ற் தெரிவிப்பு



வத்திக்கான்,ஏப்.22

முதலாவது உலகப்போரின் போது சர்வதேச அமைதிக்காக ஓயாது - அயராது போராடியவர் 16ஆவது பெனடிக்ற். அவரது அமைதி முயற்சிக்கு மரியாதை செலுத்தும் வகையிலேயே அவரின் பெயரை எனது புதிய பெயராகத் தேர்ந்தெடுத்தேன் என்கிறார் புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஜேர்மன் கர்தினால் ஜோசப் ரட்சிங்கர்.

பாப்பரசராகத் தெரிவுசெய்யப்படும் கர்தினால் அப்பதவியை ஏற்றுக்கொள்ள இணக்கம் தெரிவித்ததும், தனது இயற்பெயருக்குப் பதிலாக கத்தோலிக்க கிறிஸ்தவ புனிதர்களின் பெயரைச் சூட்டிக்கொள்ளும் மரபு கி.பி.533 ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறையில் உள்ளது.

இதனடிப்படையிலேயே, 16 ஆவது பெனடிக்ற் என்ற கத்தோலிக்கப் புனிதரின் பெயரை பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஜேர்மனியின் கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் தனக்கு வைத்துள்ளார்.

16 ஆவது பெனடிக்ற் (1914-1922) பாப்பரசராக இருந்தவர். அவருடைய காலத்தில் முதலாவது உலகப் போர் நடைபெற்றது. அப்போது கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை அடிப்படையாகக்கொண்டே நாடுகள் பல மோதிக்கொண்டன.

அந்த நெருக்கடியான காலகட்டத்தில் மேற்கத்தேய நாடுகளிடையே அமைதியை நிலைநிறுத்தவும், யுத்த அழிவைத் தடுக்கவும் தம்மை அர்ப்பணித்தவர் 16 ஆவது பெனடிக்ற்.

இவரது முயற்சியால்தான் முதலாவது உலகப் போரின்போது விஷவாயுக்குண்டுகளைப் பயன்படுத்துவதில்லை என்ற முடிவை யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள் எடுத்தன.

யுத்தம் தொடர்பான ஏழு அம்சத்திட்டமொன்றையும் அவர் வகுத்துக்கொடுத்தார்.

முதலாவது உலகப் போரினால் பிளவுபட்டுக் கிடந்த நாடுகளை ஒன்றிணைக்கவும், லட்சக்கணக்கான அகதிகளுக்கு உதவவும் ஓயாது - அயாராது - உழைத்தவர் மறைந்த பாப்பரசர் பெனடிக்ற். இத்துணை சிறப்புக்குரியது அந்தப் பெரியாருக்கு மரியாதை செலுத்தும் விதமாகவே அவரின் பெயரை தனக்குச் சூட்டிக்கொண்டார் என கர்தினால்களிடம் விளக்கமளித்தார் புதிய பாப்பரசர்.

அவருடைய வழியில் சென்று மக்களிடையே உள்ள பிரிவினையை மாற்றி அவர்களை ஒருங்கிணைக்கப் பாடுபடுவார் என்றும் அவர் மேலும் கூறினார். (க-8)

## பாப்பரசரின் மறைவுக்கு துக்கதினம்: ஆட்சேபித்தவர்களுக்கு அபராதம்

புதுடில்லி,ஏப்.22

பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பரின் மறைவையடுத்து 3 நாள் துக்கதினமாகப் பிரகடனப்படுத்தியதை ஆட்சேபித்து வழக்குத் தொடர்ந்த இரு நபர்களுக்கு புதுடில்லி உயர்நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பாப்பரசரின் மறைவு இந்தியாவைப் பொறுத்தமட்டில் முக்கியமானது அல்ல. இதற்காக சோக காலத்தை பிரகடனப்படுத்துவதன் மூலம் வேலை நாள்கள் இழக்கப்படுகின்றன என்று இவர்கள் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இவர்கள் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளது தார்மீக விழுமியங்களுக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. வழக்குத் தாக்கல் செய்தவர்களில் ஒருவர் பல்கலைக்கழக பேராசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

உலக அரங்கில்

## ஐ.நா.செயலாளர் இந்தியாவுக்கு 4 நாள் சுற்றுப்பயணம்

புதுடில்லி,ஏப்.22

ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தியாவுக்கு 4 நாள் உத்தியோகபூர்வ சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

26 ஆம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியிலுள்ள ஐ.நா.சபை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ள கொபி அனான் 27 ஆம் திகதி இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன் சிங், எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி, அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, மத்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார் என்றும் -

இந்தச் சந்திப்பின்போது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினராகக் கோரி இந்தியா விடுத்துள்ள கோரிக்கை குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் அனான் ஆலோசனை நடத்துவார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

# சீனா - பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனான நட்புறவை வலுப்படுத்த இந்தியா விருப்பம்

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிப்பு



புதுடில்லி,ஏப்.22

சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் நட்புறவை வலுப்படுத்த இந்தியா விரும்புகிறது. ஆக்கபூர்வமான ஒத்துழைப்புடன் கூடிய நட்புறவை இந்த நாடுகளுடன் ஏற்படுத்த விரும்புகிறோம். ஆனால், இந்திய எல்லை மாற்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சீனப் பிரதமர் வென்ஜியாபோ மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷரப் ஆகியோர் அண்மையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சென்றதன் பின்னர் அவர்கள் வருகைகுறித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷரப் இந்தியாவிற்கு மேற்கொண்ட 3 நாள் சுற்றுப்பயணம் வெற்றி அடைந்திருக்கிறது. இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தக, கலாசார உறவை வலுப்படுவது, பிரிந்து கிடக்கும் குடும்பங்களை இணைய விடுவது, புனிதப்பயணம் மேற்கொள்பவர்களை அனுமதிப்பது போன்றவிடயங்களில் இரு நாடுகளும் ஒத்துழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி ஜனாதிபதி முஷரப்பிடம் நான் பேசும் போது இரு நாட்டு அமைதிப் பேச்சு தொடர்ந்து வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதிகளை பாகிஸ்தான் அனுமதிக்கக்கூடாது என்று அறிவுறுத்தினேன். பயங்கரவாத முகாம்களை மூடுவதாக பாகிஸ்தான் உறுதியளித்தால்தான் அமைதிப்பேச்சு நீடிக்கும் என்பதை தெளிவுபடுத்தினேன்.

தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவி செய்வதை நிறுத்தும் பிரச்சினை இனி நடக்கப் போகும் அமைதிப் பேச்சுக்களில் தங்கியுள்ளது என்று அவரிடம் கூறியிருக்கிறேன். பாகிஸ்தான் இந்த விடயத்தில் இந்தியாவுக்கு உறுதிமொழி அளித்துள்ளது. எழுத்து மூலமும், செயற்பாடுகள் மூலமும் பாகிஸ்தான் அதனை நிறைவேற்ற வேண்டும்.

முஷரப்புடன் நடத்திய பேச்சு எனக்கு திருப்தியளித்துள்ளது. இரு நாட்டுக்கும் இடையில் உள்ள பிரச்சினைகள் உடனே தீர்ந்துவிடும் என்று எதிர்பார்ப்பது தவறு.

கடந்த ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் உறவில் ஒரு முக்கியமான ஆண்டு. இந்திய எல்லையை மாற்றியமைக்கும் பேச்சுக்கே இடமில்லை. சீனப் பிரதமர் வென்ஜியாபோ என்னுடன் பேச்சு நடத்தியபோது சிக்கிம் மாநிலம் பற்றியும் பேசினோம்.

சிக்கிம் இந்தியாவின் ஒரு பகுதி என்பதை ஒப்புக்கொண்ட சீனப் பிரதமர், இந்திய - சீன உறவில் சிக்கிம் பிரச்சினை இனி குறுக்கிடாது என உறுதியளித்தார் - என்று தெரிவித்தார்.

# அகமதாபாத்தில் பாரிய ரயில் விபத்து: 100 பேர் உயிரிழப்பு; 200 பேர் காயம்!

அகமதாபாத்,ஏப்.22

இந்தியாவின் அகமதாபாத்தில் வதோரா மாவட்டத்தில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பாரிய ரயில் விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றது. இதில் 100 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் 200 பேர் வரையிலானவர்கள் காயமடைந்தனர்.

அகமதாபாத்தில் இருந்து சென்ற 'சபர்மதி கடுகதி ரயில்' சாமாலியா என்ற கிராமத்தின் அருகே நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவத்தில் ரயில் ஓட்டுநரும், உதவியாளரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று ரயில்வே மக்கள் தொடர்பாடல் அதிகாரி சைலேந்திரக்குமார் தெரிவித்தார்.

ரயில் பெட்டிக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினரும் பொலிஸாரும், பொதுமக்களும் ஈடுபட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு குஜராத் மாநில அமைச்சர் நால்வர் சென்றுள்ளனர்.

இந்த ரயில் விபத்துச் சம்பவம் தனக்கு அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது என இந்திய ரயில்வே போக்குவரத்து அமைச்சர் லல்லுபிரசாத் யாதவ் தெரிவித்தார்.

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு அம்புலன்ஸ்கள், அவசர மருத்துவ, சிகிச்சைக்குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த விபத்துச் சம்பவம் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரயில் விபத்தில் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-8)



அகமதாபாத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் சிக்கிய ரயிலின் பெட்டிகள் சுக்குநூறாகிக் கிடப்பதையும் மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

# இயந்திரக் கோளாறினால் விமானத்தில் தீ: ஈரானில் 50 பேர் பலி; 100 பேர் காயம்!

தெஹ்ரான்,ஏப்.22

ஈரானின் சகா ஏர்லைன்ஸிற்குச் சொந்தமான பயணிகள் விமானம் தெஹ்ரான் விமான நிலையத்தில் தரையிறங்கும் போது திடீரெனத் தீப்பற்றிக் கொண்டதால் 50 பேர் உயிரிழந்தனர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என ஈரான் பொலீஸார் தெரிவித்தனர்.

ஈரான் இராணுவத்துக்குச் சொந்தமான இந்த விமானம் கிஷ் தீவிலிருந்து 157 பயணிகளை ஏற்றி வந்து விமான நிலையத்தில் தரையிறங்கும் போது ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே தீப்பற்றி எரிந்தது என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானத்தைத் தரையிறக்கும் போது விமானத் தளத்தில் இருந்த பாறையொன்றின் மீது உரசியபடி விமானம் தாறுமாறாகச் சென்றது என்றும் -

இதனாலேயே விமானம் தீப்பிடித்தது. அவசர பாதுகாப்புக் கதவும் திறக்க முடியாது சிக்கிக்கொண்டதனால் பயணிகள் அலறியபடி ஜன்னல் கதவுகளை உடைத்துக்கொண்டு வெளியே குதித்தனர். இவ்வாறு வெளியே குதித்ததனாலும் பலர் உயிரிழந்தனர் என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீப்பிடித்த விமானம் தாறுமாறாக அருகிலிருந்த காண்நதி மீது பறந்தது. அப்போது விமானத்திலிருந்து நதியில் தவறி விழுந்து குழந்தையொன்றும் உயிரிழந்தது என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

உடனடியாக அவ்விடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்து ஏனைய சில பயணிகளை மீட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)






# நிலக்கரித் தொழிற்சாலையில் திடீர் விபத்து: சாம்பியாவில் 46 சுரங்கத் தொழிலாளர் பலி!

லுசாகா,ஏப்.22

சாம்பியாவில் உள்ளூர் சந்தைக்கு நிலக்கரி விநியோகம் செய்யும் நிலக்கரி தொழிற்சாலையொன்று வெடித்து, தீப்பற்றி விபத்தேற்பட்டதால் 46 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சாம்பிய தலைநகர் லுசாகாவுக்கு தெற்கே 400 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நிலக்கரித் தொழிற்சாலையில் உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

திடீரென தொழிற்சாலை வெடித்து விபத்தேற்பட்டதனால் தொழிற்சாலை கட்டடம் முழுவதுமே தரைமட்டமாகியுள்ளது என சாம்பியாவின் சுரங்கத் தொழில் அமைச்சர் கவுண்டா லெம்பாலெம்பா வெளிநாட்டுச் செய்தி நிறுவனமொன்றுக்கு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:-

தொழிற்சாலைக்குள்ளே இருந்த பெரும்பாலான தொழிலாளர்கள் கருகிப்போயுள்ளனர்.

அநேகரின் உடல்கள் சிதறி அடையாளம் தெரியாதவகையில் சிதைவடைந்துள்ளன. இது வொரு துன்பகரமான விபத்தாகும்.

மீட்புப் பணிகள் நடந்தவண்ணம் உள்ளன. விபத்துக்கான காரணம் குறித்த விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சீனாவுக்கு சொந்தமான இந்தத் தொழிற்சாலை 2003 ஆம் ஆண்டு தொடக்கம் சாம்பியாவில் இயங்கிவருகிறது.

வருடாந்தம் சுமார் 6 ஆயிரம் மெட்ரிக்தொன நிலக்கரி இந்த தொழிற்சாலை மூலமாக விநியோகிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது என்று அவர் கூறினார். (க-8)

# மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் சித்திரைத் திங்கள் 10 ஆம் நாள் (23.04.2005) சனிக்கிழமை 07.15மணி தொடக்கம் 9.45 மணிவரை வரும் சுபநேரத்தில்

எமது கிளை நிறுவனமாக

## ஹோட்டல் ஹோலக்ஸ்

என்னும் ஓர் அசைவ உணவகத்தைக் காங்கேசன்துறை வீதியிலுள்ள (சுன்னாகம் நாகம்ஸ் திரையரங்குக்கு முன்பாக) கட்டடத்தில் ஆரம்பித்து நடத்தவிருக்கின்றோம். எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தலைமை உணவகமான

## வாணி விலாஸ்

65, கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில்

அமைந்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



எமது தயாரிப்புக்களான
★ புரியாணி ★ நூடில்ஸ்
★ றோல்ஸ் ★ பற்றிஸ்
★ பிறைட் றைஸ்
★ இடியப்பக்கொத்து ★ கொத்துரொட்டி
முதலியனவற்றுடன்

சகலவிதமான சைவ, அசைவ உணவு வகைகளும் தரமான முறையில் சுகாதார முறைப்படி செய்துகொடுக்கப்படும். உங்கள் திருமண வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்குத் தேவையான சகல உணவுகளையும் எம்மிடம் ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்.

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். -உரிமையாளர்.

(42443) (22-14-26)





உ

# பருத்தித்துறை மாதனை கற்பகப்பிள்ளையார் ஆவர்த்தன
## மஹா கும்பாபிஷேகப் பெருவிழா
## 22-04-2005

நிகழும் பார்த்திப ஆண்டு சித்திரைத் திங்கள் 9ஆம் நாள் (22.04.2005) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மூலமூர்த்தியாக விளங்குகின்ற விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளான மகாலட்சுமி, வெங்கடாஜலபதி, முருகன், துர்க்கை, ஐயப்பன், தெட்சணாமூர்த்தி, பைரவர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு நடைபெறுகின்றது.

அன்றைய மாதனை கற்பக விநாயக ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்புற அமையவும் இந்த நன்னாளில் அடியார்கள் அனைவரும் விக்கினங்கள் தீர்க்கின்ற விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து, அவரின் கிருபா கடாட்சத்திற்குப் பாத்திரமாகி அமைதியும் சுபீட்சமும் நிறைந்த பெருவாழ்வு வாழவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

**Mathanai Welfare Association (London)**
**மாதனை நலன் கருது சங்கம் (லண்டன்)**

**மற்றும் மாதனையூர் மக்கள்.**
**வெளிநாட்டில் வதியும் மாதனையூரவர்கள்**

(44525) (21-14-11)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா



கரம்பொன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை (யா/தொழில்நுட்பக் கலலூரி முன்பாக) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா அவர்கள் 20-04-2005 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (பஞ்சாட்சரம்) அவர்களின் பாசமிகு மனைவியும காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாகமணி சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும் தேவராணி, தேவராசா (பிரதி அதிபர், யா/கரம்பொன் சண்முகநாத ம.வி., ஊர்காவற்றுறை), புஸ்பராணி, புஸ்பராசா (கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்), மனோராணி (முன்னாள் ஆசிரியை, யா/வண்ணை நாவலர் ம.வி. தற்பொழுது பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியசீலன் (குட்டி, சாவகச்சேரி - கனடா), டாக்டர் யசோதா, மகேந்திரன் (பிரான்ஸ்), சத்தியேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கஜலக்சனாவின் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற புனிதம்மாவின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவாகளான சோமசுந்தரம், கனகம்மா, சுந்தரம் மற்றும் வள்ளியம்மை, காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், நடராசா மற்றும் தர்மபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-04-2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


யா/தொழில்நுட்பக் கல்லூரி முன்.
பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.

தகவல்:
க.தேவராசா (மகன்),
க. புஸ்பராசா (மகன்).

(44520)(26-14-21-11)

## சின்னத்துரை ஆலாலசுந்தரம்

(சுன்னாகம் ப.நோ.கூ.ச. முன்னாள் ஊழியர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வசித்தவரான சின்னத்துரை ஆலாலசுந்தரம் 21.04.2005 சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பாக்கியம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற ரட்ணபிள்ளை மற்றும் மீனாம்பிகை ஆகியோரின் மருமகனும் சிறீபாலசரஸ்வதியின் அன்புக் கணவரும் சுகன்யாவின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரன் (கொழும்பு) காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் சகோதரரும் மங்கேஸ்கரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.04.2005 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மிதிலை', டச்றோட்,
உடுவில், சுன்னாகம்.

தகவல்:
சி.மகேஸ்வரன் (சகோதரன்)
தொ.பேசி: 0112360947 0773087200

(44528)(32-21-14-11)

## காரைநகர் வீதிகளுக்கு மின்விளக்குகள

காரைநகர்,ஏப்.22

காரைநகரின் பிரதான வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

காரைநகர் வலந்தலையில் இருந்து ஆலடி வரை முதற்கட்டமாக மின் விளக்குகள் பொருத்தப்படுகின்றன.

இந்த மின் விளக்குகளைப் பொருத்துவதற கான நிதியினை லண்டன் காரைநகர் நலன் புரிக்கழகம் வழங்கியுள்ளது. தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் மின்விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகக் காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளர் ஜெ.தில்லையம்பலவாணர் தெரிவித்துள்ளார். (ஒ-73)

## பஸ்நேரம் மாற்றம்

வலி.தென்மேற்கு,ஏப்.22

சில்லாலையிலிருந்து தினமும் காலை 6.30 மணிக்கு யாழ்.நகர் நோக்கிப் புறப்பட்டு வந்த 791 தட இலக்கப் பேருந்து தற்போது காலை 5.30 மணிக்குப் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில்லாலை பேருந்துப் பிரயாணிகள் சங்கம வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளருக்குக் கடித மூலம் விடுத்திருந்த வேண்டுகோளை அடுத்தே இந்த நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த பஸ் சில்லாலையிலிருந்து காலை 6.30 மணிக்குப் புறப்பட்டால் இப்பகுதியிலிருந்து யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் செல்லும் நோயா ளர்கள் மற்றும் வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் மக்கள் ஆகியோருக்குப் பெரும் வசதியாக இருக்கும் என்று மேற்படி சங்கத்தினர் தமது வேண்டுகோள் கடிதத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

## தொழில்திறன் பயிற்சி

தென்மராட்சி,ஏப்.22

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்கு வானொலி மற்றும் தொலைக் காட்சி திருத்தும் தொழிற்றிறன் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் அடுத்த மாதம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இப்பயிற்சி நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து பயிற்சி பெற விரும்பும் இளைஞர், யுவதிகள் தமது விண்ணப பங்களை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபரிடம் இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (ஒ-117)


# இலவசம்

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மற்றுமோர்

## இளைஞர்களுக்கான பயிற்சி

(வாழும் கலைப்பயிற்சி அறநிலையம் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது)

யாழ்.நகரத்தில் 22.04.05 முதல் 28.04.05வரை காலை 7.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை நடத்தப்படவுள்ளது. 18வயது முதல் 30 வயது வரையுள்ள ஆண்/பெண்கள். மிகக்குறைந்த ஆசனங்களேயுள்ளதால் முந்துபவர்களுக்கு மாத்திரமே இடம்.

**பயிற்சியில் பங்குகொள்ள விரும்புபவர்கள் இன்று நேரடியாக யாழ்.பல்கலைக்கழக வளாகத்திலுள்ள தியான மண்டபத்தில் (சிவன்கோயில் அருகில்) காலை 11.00 மணிவரை வந்து பங்குகொள்ளலாம்.**

முன்பதிவுசெய்து வராதவர்களும் வரலாம்.


இதில் கிடைக்கும் பயன்கள்:

- மன இறுக்கம், மன உளைச்சல் நீக்கி, ஆத்ம சக்தியை உணர்ந்து ஆன்மீகவழியில் ஊக்கம்கொண்டு செவ்வனே பணிசெய்ய -
- நினைவாற்றல் பெருக -
- உடல் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் பெற -
- நேர்மை, வாய்மை, மனிதநேயத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள -

குறிப்பு: ஒவ்வொரு முகாமிலிருந்தும் திறமைமிக்க பத்து நபர்கள் மேற்பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவர். பரீட்சை எதுவும் இல்லை. காலை, மதிய, மாலை உணவு இலவசம். (44505)(21-14-11)


# மரண அறிவித்தல்

## கந்தையா கதிரவேலு ஆசாரி



காரைநகர், களபூமி, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரவேலு ஆசாரி அவர்கள் 21.04.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னுப்பிள்ளை அவர்களின் மகனும் ஆச்சிமுத்து, காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லம்மா ஆகியோரின் அன்புத் தம்பியும் சாவித்திரியின் அன்புக் கணவரும் சசிகலாதேவி, இராஜசிலோசனா, சாந்தினிதேவி, ரஞ்சிதமலர், கனகசபை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி, கிருபானந்தம், அருளானந்தம், சாந்தலிங்கம் (சாந்தன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகத் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
களபூமி,
காரைநகர்.

தகவல்:
து.நடராசா ஆசாரி
(மைத்துனர்)

(44524)(21-14-11)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## குழப்பத்தை ஏற்படுத்தி ஏமாற்றும் எத்தனம்

திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஒரு புதிய விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார். முஸ்லிம் தலைவர்கள் மட்டுமல்லாமல் சகல இனங்களின் தலைவர்களும் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாக அது அமைந்துள்ளது.

"நாட்டில் நிரந்தர சமாதானம் மலர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதைக் குழப்புவதற்குக் கங்கணம் கட்டி நிற்கின்றன சிங்களப் பேரினவாத அமைப்புகள் மற்றும் சக்திகள். பல தரப்புகளுக்கும் இடையில் மோதலையும் குரோத உணர்வையும் தூண்டிவிடுவதன் மூலம் வன்முறைகளை வெடிக்க வைத்து, நிலையைக் குழப்பி, சமாதானத்துக்கான வாய்ப்புகளை நாசப் படுத்திவிடலாம் என அவை எண்ணுகின்றன.

"அந்தவகையில் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இன மோதலைத் தூண்டிவிடவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் மத்தியில் செயற்படும் ஆயுதக் குழுக்களே பொத்துவிலில் அமைந்துள்ள புத்தர் சிலைக்கு அண்மையில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின என்று ஜாதிக ஹெல உறுமயவினர் பகிரங்கமாகச் சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களைக் கூட இத்தகைய இனக் குரோதத்தைத் தூண்டி, வன்முறைகளை வெடிக்க வைத்து, அதன் மூலம் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் எத்தனத்தின் ஒரு பகுதியாகவே கருதவேண்டியுள்ளது" - என்று ஹரீஸ் எம்.பி. தெரிவித்திருக்கின்றார்.

முஸ்லிம்கள் மத்தியில் ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றனவா, அவைதான் பொத்துவில் குண்டு வீச்சுக்குக் காரணமா என்பவையெல்லாம் விசாரணைக்கும் சர்ச்சைக்கும் உரியவை.

ஆனால், இனங்களுக்கு இடையில் - தரப்புகளுக்கு இடையில் - மோதல்களைத் தூண்டிவிட்டு பெரும் வன்முறைகளுக்கு வழி செய்வதன்மூலம் அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - இணக்கத்துக்கான எத்தனங்களை - குழப்பலாம் என்பதில் பேரினவாதம் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது என்பது முழு உண்மை.

தமிழர்களுக்கு இடையே மோதல், தமிழர் - சிங்களவர் இடையேயும், தமிழர் - முஸ்லிம்கள் இடையேயும் குழப்பம், முஸ்லிம்கள் - சிங்களவர் இடையே முறுகல் என்றெல்லாம் வரும் செய்திகளின் பின்னணியை ஊடுருவிப் பார்ப்போமேயானால் இந்த பௌத்த - சிங்கள மேலாண்மைவாதத்தின் அடி மூலத்தின் தொடர்பை நாங்கள் அங்கு காணமுடியும்.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருணா குழு என்ற பெயரில் நடத்தப்படும் இருள் யுத்தமாகட்டும் -

திருகோணமலை மாவட்டம் மூதூர், கிண்ணியா போன்ற பிரதேசங்களில் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் அடிக்கடி நிகழ்ந்த தமிழர் - முஸ்லிம்கள் கலவரங்களின் பின்னணியாகட்டும் -

இப்போது உல்லையிலும், மற்றைய பிரதேசங்களிலும் முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் பாரம்பரிய பிரதேசம் - தாயகம் - பௌத்த, சிங்களக் குடியேற்றங்களின் பெயரில் கபளீகரம் செய்யப்படும் போக்குகளிலாகட்டும் -

எல்லாமே மேலாண்மைப் போக்கின் - பேரினவாதத்தின் - சதியை அடிப்படையாகக் கொண்டவை என்பது விடயமறிந்தவர்களுக்குப் புரியாததல்ல.

இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பேரினவாதத்தின் அடக்கு முறையும், அதற்கு எதிரான சிறுபான்மையினத்தினரின் எழுச்சியும், புரட்சியும் இன்று சர்வதேசமுமே நன்கு புரிந்துகொண்ட விடயங்களாகும். சிறுபான்மையினரின் போராட்டங்களில் உள்ள நீதி, நியாயம் இன்று சர்வதேசத்துக்கும் புரிந்துகொண்டுவிட்டதால், அந்த இனங்களுக்கு நீதியானதை - நியாயமானதை - வழங்கியேயாக வேண்டிய இக்கட்டு பெரும்பான்மை இனத்தவர்களின் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமக்குரியதை - தங்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்கின்ற தீர்வுகளை - சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பின் கீழ் பேரினவாதிகள் தமக்கு வழங்குவதற்கு வாய்ப்பளித்து, இன மோதல் களை நிறுத்தி, அமைதி பேணுகின்றனர் சிறுபான்மையினர்.

இந்நிலைமை நீடித்தால் சிறுபான்மையினருக்கு உரியதை - அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்கின்ற தீர்வுகளை - அவர்களுக்கு வழங்கிவிடவேண்டி வந்துவிடுமே என்று ஏக்கமடைந்துள்ள பேரினவாதம் இனங்களுக்கிடையே குரோத உணர்வை வளர்த்து, வன்முறையைத் தூண்டி, மோதல்களை ஏற்படுத்தி, அமைதியைக் குழப்பினால், சமாதான முறையில் நியாயமானதை வழங்கும் விவகாரத்தை பாழ் படுத்திவிடலாம் எனத் திட்டமிடுகின்றது.

இதைத்தான் முன்னாள் எம்.பியான ஹரீஸ் சுட்டிக் காட்டுகின்றார்.

அனைத்துச் சிறுபான்மை இனங்களின் தலைவர்களும் கவனத்தில் எடுக்கவேண்டிய விடயம் இது. பேரினவாதத்தின் இந்தச் சதிக்கு இடங்கொடுக்காமல் எமக்கு உரியதை நாம் அடைவதற்குத் திட்டமிட்டுச் செயற்படுவது சிறுபான்மை இனங்களின் தலைவர்களின் பொறுப்பும் கவனமுமாக இருக்கவேண்டும்.

'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சை வழங்க

# தள நிலைமையை ஆராய்வதற்கு அமெ. மருத்துவர் குழு யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கான தள நிலைமையை ஆராய்வதற்காக அமெரிக்க வைத்தியர் குழு ஒன்று குடாநாட்டுக்கு வருகை தந்துள்ளது.

அமெரிக்க புளோரிடா மாநில றோட்டறிக் கழகமும் அந்த மாநிலத்தில் செயற்படும் 'வேவ்' உதவிநிறுவனமும் இணைந்து 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சையை இங்கு மேற்கொள்ள முடிவு செய்துள்ளன.



யாழ். போதனா வைத்தியசாலையில் அமெரிக்க 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சைக் குழுவினர் நோயாளரைப் பார்வையிடுகின்றனர்.

இந்த அமைப்புகளின் ஏற்பாட்டில் புளோரிடா மாநில 'வெல்வை பவுண்டேசன்' நிறுவனத்தின் 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சை நிபுணர் வட் பட்மேக்கர் யாழ்ப்பாணம் வந்துள்ளார். அவருடன் வைத்திய கலாநிதி றோட்டேரியன் ரி.அலியும் தாதிகளான மொரீன் கியூமி, சரச் லூக்கஸ் ஆகியோரும் வந்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் ஒன்பது பேருக்கு இவர்கள் சத்திர சிகிச்சை மேற்கொண்டனர். இந்தச் செயற்பாட்டுப் பணிகளுக்கு யாழ். றோட்டறிக் கழகம் உதவிகளை வழங்கியது.

அக்குழு நேற்று புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டது.

அங்கு சேகரித்த தகவல்களின் அடிப்படையில் மேலும் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள இந்தக் குழு ஓகஸ்ட் மாதம் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருக்கின்றது.

இந்தக் குழுவினர் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தொழில்சார் பிரிவுப் பொறுப்பாளர் என்.சரவணபவன் தலைமையில் தேநீர் விருந்து ஒன்று அவர்களுக்கு வழங்கப்பட்டது. (ஒ-3)

## தொந்தரவுசெய்த வாலிபரை சாமர்த்தியமாகப் பிடித்த பெண்

### கலாசாரம் பேணுவோரிடம் ஒப்படைத்தார்

தொல்புரம்,ஏப்.22

வீட்டில் தனியாக இருந்த குடும்பப் பெண்ணுடன் தவறாக நடக்க முற்பட்ட வாலிபரை, அப்பெண்மணி சமயோசிதமாகப் பிடித்து கலாசாரம் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைத்தார். இச்சம்பவம் தொல்புரம் மத்தி, சுழிபுரம் பகுதியில் இடம்பெற்றது.

குறிப்பிட்ட பெண்மணியின் கணவர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளார். மேற்படி பெண்மணியும், அவரது இரு குழந்தைகளும் வீட்டில் வசித்து வந்தனர்.

இந்நிலையில் சில இளைஞர்கள் தவறான நோக்குடன் அப்பெண்மணியை அணுகமுற்பட்டனர். அத்துடன், அவருக்கு தொந்தரவும் புரிந்துள்ளனர்.

இதனையடுத்து, அந்த இளைஞர்களில் ஒருவரை சமயோசிதமாகப் பேசி ஏமாற்றி வீட்டுக்குள் அழைத்த அப்பெண்மணி, அவருக்கு தேநீர் அருந்தக் கொடுத்தார். அந்த இளைஞர் தேநீர் அருந்திய போது அவரது முகத்தில் மிளகாய்த் தூளை பெண்மணி விசிறினார். இதனால் திணறிய இளைஞரை முன்கூட்டியே திட்டமிட்டு வீட்டினுள் மறைந்திருந்த கலாசாரம் பேணும் இளைஞர்கள் மடக்கிப் பிடித்தனர். அவருடன் சேர்ந்து பெண்மணிக்கு தொந்தரவு கொடுத்த மற்றைய இளைஞர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஓ)

மருதங்கேணி கூட்டுத்தாபனத்தின்

## தலைவர் பதவியிலிருந்து ஈ.பி.டி.பி. பிரமுகர் நீக்கம்

மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத் தலைவர் பதவியில் இருந்து ஈ.பி.டி.பி. பிரமுகர் குணசேகரன் சங்கர் நேற்று முன்தினம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளார். கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்திக் கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனை அறிவித்துள்ளார்.

சபையின் புதிய தலைவராக எஸ்.தவராசா அவரால் நியமிக்கப்பட்டுள்ளார்.(3)

## பேராசிரியர் அனில் குமாரின் ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஏப்.22

புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர் அனில் குமார் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார்.

அவர் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி சிவகுருநாதர் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் அழைப்பின் பேரில் அனில் குமார் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தெலுங்கு மொழியிலான ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்பவர் அனில் குமார்.

'பிருந்தாவன்', 'பிரசாந்தி நிலையம்' சத்திய சாயி உயர் கல்வி படிப்பு பல்கலைக்கழகத்தில் தாவரவியல் பேராசிரியராகவும் பணிபுரிபவர்.

திங்களன்று இந்து மகளிர் கல்லூரியில் அவர் வழங்கவுள்ள சொற்பொழிவு நிகழ்வுக்கு வடபிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் இ.வசந்தசேனன் தலைமை வகிப்பார்.

பேராசிரியர் அனில்குமாரின் உரையை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத் தலைவர் டாக்டர் இ.கணேசமூர்த்தி தமிழில் தொகுத்து வழங்குவார். (ஜ)

### நாளை

சித்திரை 10
சனிக்கிழமை
23.04.2005
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 04.31 வரை
நட்சத்திரம் : அத்தம்
முற்பகல் 8.50 வரை
சித்திரைச் சித்திரை
சுபநேரம் : 03.00 - 04.30
ராகுகாலம் : 09.00 - 10.30
(யாவும் பழைய நேரப்படி)

## சாயி நிறுவனங்கள் நிர்மாணித்த 4ஆவது வீடு இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22

வடபிராந்திய சாயி நிறுவனங்களின் ஒன்றிணைந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறையில் அமைக்கப்பட்ட நான்காவது வீடு இன்று வெள்ளிக்கிழமை கையளிக்கப்படவுள்ளது.

புலோலி மேற்கு சாளம்பைப் பகுதியில் நிறுவப்பட்ட இந்த வீடு குடும்பத் தலைவரை இழந்த - ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட - தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி(வயது 56) என்பவரது குடும்பத்துக்கு கையளிக்கப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு வீடு சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்படும்.

குடும்ப விவரம்

குடும்பத் தலைவி பெயர் தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி (வயது 56), குடும்பத் தலைவர் காலமாகிவிட்டார்.

குடும்ப அங்கத்தவர் தொகை - 7

★ முதலாவது மகள் - அன்ரன் போல் வள்ளிநாயகி(வயது 42), திருமணமாகி கணவன் காலமாகிவிட்டார். இவருக்கு இரண்டு பிள்ளைகள்.

★ இரண்டாவது மகள் - சுப்பிரமணியம் வந்தகுமாரி, கணவன் பிரிந்துவிட்டார்.

★ மூன்றாவது மகள் - டேவிட் செல்வராணி , கணவன் பிரிந்துவிட்டார்.

★ செல்வி செல்வகுமாரி (வயது 30)

இவர்கள் எல்லோரும் ஓலைக்கொட்டில் வீட்டில் வசித்துவருகின்றார்கள். இவர்களுக்கே வீடு கையளிக்கப்படும். (ஜ)

### உதயவாக்கு

பொறுமையுள்ளவன் அனைத்தையும் நல்லதாக்கி விடுகின்றான்; ஆத்திரம் உள்ளவன் நல்லதையும் தீயதாக்கி விடுகின்றான். - ஓர் அறிஞர்.

## சுனாமிக் கொடுப்பனவு

தென்மராட்சி.ஏப்.22

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியிருந்தவர்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு அடுத்த வாரம் வங்கியில் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுக்கான பட்டியல் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் மக்கள் வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் தங்கியிருந்த 123 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்குவதற்கான பட்டியல் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## சீரற்ற வீட்டுத் திட்டம்: பொதுமக்கள் அவதி

வலி.வடக்கு.ஏப்.22

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கற்கோவளம் புனித நகர்ப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் மழை காலத்தில் குடியிருக்கமுடியாதுள்ளதாக அந்த வீடுகளில் வசிப்போர் கூறுகின்றனர்.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடுகளில் முகட்டுக் கூரைகள் போடப்படவில்லை என்றும் -

வீடுகளுக்கான பெரும்பாலான கதவுகள், ஜன்னல்கள் பொருத்தாமல் இவற்றை வழங்கியுள்ளதாகவும் - பொதுமக்கள் கூறுகின்றனர். நாகர்கோயில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாத நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இப்பகுதியில் குடியமர்ந்துள்ளனர். போதிய வீதி வசதிகள் இல்லாமல் இருப்பதுடன், தமது பகுதிக்கு கிராம அலுவலர் உட்பட அலுவலர்கள் வந்து தமது நிலையைப் பார்வையிடுவதில்லையெனவும் அவர்கள் கூறினர். (ஓ-86)

**BITSMANS**
**மானிப்பாய்**

**2007 A/L**

பொருளியல் - P.சண்
கணக்கீடு - R.வின்சன்
வணிகக்கல்வி - S.உமாகாந்

ஆரம்பம் : (44508) (22-16-24)
23.04.2005 (சனி 3 p.m.)


## உளவளத் துணையாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

வடபகுதியிலுள்ள உளவளத் துணையாளர்களை ஒன்றிணைத்து வட இலங்கை உளவளத துணையாளர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 9 ஆம் திகதி அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிர்வாகசபைத் தெரிவும் இடம் பெற்றது.

இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்புவர்கள் தங்களது உளவளத் துணையாளர் சான்றிதழுடன் உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி விவரத்தை இணைத்து சங்கத்தின் தற்காலிக நிலையமான அகவொளி குடும்பவளத் துணை நிலையம், சென்.பற்றிக்ஸ் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அகவொளி நிலைய இயக்குநர் அருட்தந்தை எஸ்.ஜே.இராஜநாயகம் கேட்டுள்ளார். (ஒ-202)

# தமிழீழ விடுதலைப் போராட்டம் வெல்வது வரலாற்றின் கட்டாயம்

## சுப.வீயின் நூல் வெளியீட்டில் வைகோ உறுதி

தமிழீழ விடுதலைப் போர் வெல்வது வரலாற்றின் கட்டாயம் என்று தமிழ் நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்ட பேராசிரியர் சுப.வீரபாண்டின் எழுதிய 'பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் பேசியபோதே வைகோ இதைத் தெரிவித்தார்.

மேற்படி நூலை வைகோ வெளியிட, தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி பெற்றுக்கொண்டார்

இந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய வைகோ இந்திய – இலங்கை இராணுவ ஒப்பந்தத்தைத் தடுக்க வேண்டும் என்பதற்காக இந்தியப் பிரதமரிடம் தான் மேற்கொண்ட முயற்சிகளை விவரித்தார்.

இந்த ஒப்பந்தம் ஏற்பாட்டால் காஷ்மீர் தீவிரவாத உணர்வு தமிழ்நாட்டில் உருவாவதை எவராலும் தடுக்கமுடியாது என்று நேரடியாகவே பிரதமரிடம் கூறினார் என்றும் –

இந்த ஒப்பந்தம் மூலம் தமிழீழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா இன்னொரு தவறைச் செய்து விடக் கூடாது என்று எச்சரித்தார் என்றும் – வைகோ கூறினார்.

ஈழத் தமிழர்கள் தமிழ்த் தேசியத்தைக் காக்க போர்க் களத்திலே நிற்கிறார்கள். அவர்கள் வெல்வார்கள். அவர்களது போராட்டமும் வெல்லும். அந்தப் போராட்டம் வெல்வது வரலாற்றின் கட்டாயம் என்றும் வைகோகூறினார். (ஒ)


**வேலையாள்கள் தேவை**

எமது போட்டோம் படப்பிடிப்பு ஸ்ரூடியோவுக்கு –
☆ வெளிப்புறப் படப்பிடிப்பாளர்கள்
☆ பயிற்சியாளர்கள்
☆ பில் கிளாக் ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
உரிமையாளர்: சோ.தேவதாசன்,
நியூ சித்திரகலா ஸ்ரூடியோ
இல.70, 72, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (44419)(26-16-24)



**A/L 2007 பிரிவுக்கான**

**ENGLISH CLASSES**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**பிரபல ஆசிரியர் - Mr.B.JOTHY**

**அரிய சந்தர்ப்பம்**
மேலுள்ள வகுப்புகளில் சேரும் மாணவர்கள் அனைவருக்கும்
O/L ENGLISH MODEL PAPER
CLASS (பயிற்சி வகுப்பு) **இலவசம்.**

**பருத்தித்துறையில்** - 27-04-2005 (பி.ப. 5 மணி)
**OXFORD ENGLISH ACADEMY**
P.K. LANE, POINTPEDRO

**நெல்லியடியில்** - 27-04-2005 (பி.ப. 3 மணி)
**MATHS CENTRE**

**சாவகச்சேரியில்** - 25-04-2005 (பி.ப. 4 மணி)
**GNANOTHAYA ACADEMY**
சங்கத்தானை

(44502) (24-16)

A/L எடுத்தவர்கள் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான
SPECIAL ENGLISH ஆரம்பம் - 30-04-2005

(அனுமதியை மேலுள்ள அலுவலகங்களில் முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.)



**வாழ்வகம் - விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்**
**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

மேற்படி இல்லப் பொதுச் சபைக் கூட்டம் 23.04.2005 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மருதனார்மடம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகப் பணிமனையில் நடைபெறும். புதிய நிர்வாகசபைத் தெரிவும் நடைபெற இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அங்கத்துவத்தைப் புதுப்பிக்காதோரும் அன்று தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

வாழ்வகம்,
விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

செயலாளர்,
வாழ்வகம்.

(சி-42426) (24-16)


## வீதி திருத்தம்

சாவகச்சேரி,ஏப்.22

சாவகச்சேரி நகர சபை வீதி - வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் செப்பனிடப்பட்டு வருகிறது. இந்த வீதி சாவகச்சேரி பொதுச்சந்தை பின்புறமாகத் தனங்களப்பு வீதியையும் - புகையிரத நிலைய வீதியையும் இணைக்கும் வீதியாகும்.

இவ்வீதி நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (31)

## விடுதலையின் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.22

மானிப்பாய் 'அசெம்பிளி ஒவ் கோட்' நடத்தும் ஆத்மீக விடுதலையின் பெருவிழா இன்று தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களுக்கு காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் 1.30 மணி வரை உபவாச ஜெபமும் வேதப்படிப்பும் பிற்பகல் 3 மணிக்கு விடுதலையின் பெருவிழாவும் நடைபெறவுள்ளன.

(ஒ-202)


**2ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர்
**கந்தையா கனகசபாபதி**
(நில அளவையாளர்)

தோற்றம் 1932-03-04 | மறைவு 2003-04-15

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பும் நினைவும்
என்றும் இருக்கும்!

ஊரெழு, சுன்னாகம். (44479)(26-16-24) - மனைவி.



உ
சிவமயம்

**புதுமனைப் புகுவிழா அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் சித்திரை மாதம் 09ஆம் நாள் இன்று(22.04.2005) வெள்ளிக்கிழமை காலை 8.15மணிதொடக்கம் 9.15 மணிவரையுள்ள (பழைய நேரம்) சுபமுகூர்த்த சுபவேளையில்,

**ஜெயந்தி மாளிகை**

எமது புதுமனைப் புகுவிழா நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து புது மனையை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.



தங்கள் நல்வரவை விரும்பும்:
திரு. திருமதி ச.ஜெகதீஸ்வரன் தம்பதிகள்
(ச.கண்ணன்)
உரிமையாளர்
(புதிய நதியா நகை மாடம்).

321-T, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3478

(44209) (53-16-24)



உ
ஸ்ரீகற்பகாம்பாள் துணை
இணுவையூர்
**மா.த.ந.வீரமணி ஐயரின்**
**பௌர்ணமி தின நாதோபாஸனை**
**ஆராதனை**

| | |
|---|---|
| இடம்: | மஹாவித்துவான் இல்லம் (பரராஜசேரகப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்) |
| காலம்: | நாளை (23-04-2005) சனிக்கிழமை |
| நேரம்: | மாலை 5.00 மணிக்கு (புதிய நேரம்) |
| தலைவர்: | செல்வி புஸ்பா செல்வநாயகம் (முன்னாள் ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி) |
| பாட்டு: | வளரும் இளங்கலைஞர் செல்வி சிவரஞ்சனி சிவபாதசுந்தரம் |
| வயலின்: | செல்வி மதுரா வரதராஜன் |
| மிருதங்கம்: | செல்வன் கிருபா அனந்து |
| ஆசியுரை: | நா.சர்வேஸ்வரக்குருக்கள் (சுன்னாகம், கதிரைமலை சிவன் தேவஸ்தானம்) |
| தலைவர் உரை: | |
| நன்றியுரை: | |
| பாட்டு: | பிரம்மஸ்ரீ க.இராமநாதன் |
| வயலின்: | திரு.உ.இராதாகிருஷ்ணன் |
| மிருதங்கம்: | திரு.சி.துரைராஜா |
| கெஞ்சிரா: | செல்வன் கிருபா அனந்து |
| கடம்: | திரு.A.செல்வரட்ணம் |
| முகர்சிங்: | செல்வன் K.நந்தகுமார் |

இசை ஆர்வலர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருமதி சு.வீரமணி ஐயர்.

(சி-42424) (24-16)

# உடல்நலன் பேணும் ஆலயங்கள்

ஞானக்கதிர்

இந்து ஆலயங்கள் தெய்வபக்தியையும், சமயத்தையும் மட்டும் வளர்ப்பதற்கென அமைந்தவை என எம்மிற் பலர் நம்புகின்றோம். பகுப்பாய்வு செய்யின் ஆலயங்களின் அமைப்பு முறைகள், வழிபாட்டு முறைகள் ஆகியவை வேறுகருத்தைப் புலப்படுத்துகின்றன.

முதலாவதாக, விநாயகர் சந்நிதியில் எமது செவிகளை விரல்களால் பிடித்தபடி இருந்தும் எழுந்தும் தோப்புக்கரணம் போடுகிறோம். இது உடற் பயிற்சிக்கு ஒப்பானது.

ஆலயச்சுற்றுப்பிரகாரம் கருங்கல்லினால் பாவப்பட்டுள்ளது. கருங்கல் கண்டங்களில் நுண கலைகள் உள்ளன. நாம் அவற்றின் மீது வெறுங்காலுடன் நடக்கும்போது எமது உள்ளங்களில் வெவ்வேறு பகுதிகள் அழுத்தப்படுகின்றன. எமது உள்ளங்கால் நரம்பு மையங்களைக் கொண்டுள்ளன. குறித்ததொரு பகுதி அழுத்தப்பட்டதும் அதனுடன் தொடர்புள்ள உடற்பகுதி உடனே இயக்கம் பெற்றுத் திறனுடன் செயற்படத் தொடங்குகிறது. இதேபோல, எமது உள்ளங்காலின் அனைத்துப் பகுதிகளும் அழுத்தப் பெற்றதும் அவை எமது அனைத்து உடற்பகுதிகளும் திறனுடன் செயற்பட உதவுகின்றன.

சுற்றுப்பிரகாரத்தில் தட்சணாமூர்த்தி விக்கிரகம் ஓர் மரத்தின் கீழ் குருபாவனையில் அமர்ந்து இருப்பதைக் காணலாம். அவர் திருமுன் அமர்ந்திருந்து செபிப்பது அல்லது தியானம் செய்வதென்பது வழமையானது. அவர் தெற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். நாம் அவர் திருமுன அமரும்போது வடக்கு நோக்கி இருந்தே தியானிக்கின்றோம். இதன் பெறுபேறாக எமது உடல் வடக்கிலுள்ள காந்தப் புலத்தினால் ஈர்க்கப்படுகிறது. எமது குருதிச் சுழற்சி சீராகின்றது. வலிகள் உபாதைகளிலிருந்து நாம் விடுபடுகின்றோம். எமக்கு மன அமைதி கிட்டுகிறது. தன்னியக்கக் காந்த சிகிச்சை எமக்குக் கிடைக்கிறது.

ஒவ்வொரு சிவாலயமும் தன் சுற்றுப்பிரகாரத்தின் மருததுவத்தன்மை கொண்ட ஒரு மரதகைக் கொண்டுள்ளது. நாம் அமர்ந்திருந்து தியானிக்கும்போது அந்த மரத்தைத் தழுவிவரும் மென காற்று எம்மையும் அரவணைக்கின்றது. இதனால், நோய்க்கிருமிகள் ஒழிக்கப்பெற்று எமது சுவாசப்பைகள் துப்புரவாகின்றன. மூன்று தடவைகள் சுற்றுப்பிரகாரத்தில் நடந்து வருவது நடைப்பயிற்சியை மேற்கொண்டு உடலை உறுதியாக வைத்திருக்க உதவுகின்றது.

இறுதியாக, நாம் வழ்ந்து வணங்கும்போது கழுத்து, இடுப்பு, முழங்கை, முழந்தாள், கணுக்கால் பொருத்துக்களின் செயற்பாட்டை இலகுவாக்குகின்றது.

இவையனைத்தும் இந்து ஆலயத்தை உடல் நலம் பேணும் இல்லம், உடற் பயிற்சி அரங்கு, மருத்துவ நிலையம ஒன்றிணைந்த தொரு நிலையமாக்குகின்றது.

பி.உமேஸ்சங்கர்
கலைமாணி, விரிவுரையாளர்

※



உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலய மணவாளக் கோலத்திருவிழாவின் போது கலாபூஷணம் வீ.கே.நடராசாவின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

கே.பத்மநாதன் (வயலின்), க.ப.சின்னராசா (மிருதங்கம்), நா.மாதவன் (கடம்) ஆகியோரின் பக்க வாத்தியங்களுடன், வீ.கே.நடராசா இசைக்கச்சேரி செய்வதைப் படத்தில் காணலாம்.

# ஐ.நா.செயலர் பதவிக்கான போட்டி: பிரசாரத்தை முடுக்குகிறது இலங்கை

## 'பண்டுங்' மாநாட்டிலும் ஆதரவு திரட்டும் நடவடிக்கை

கொழும்பு,ஏப்.22

ஐ.நா. பொதுச்செயலாளர் பதவிக்கான தேர்வுக்குத் தனது வேட்பாளரை முன்னிறுத்தியுள்ள இலங்கை, அத்தேர்வில் ஆசிய நாடுகளில் இருந்து பொது - ஏக வேட்பாளராக இலங்கைப் பிரதிநிதியை நிறுத்தச் செய்வதற்கான ஆதரவைப் பெறும் பிரசாரத்தில் முழு மூச்சுடன் ஈடுபடவிருக்கின்றது.

இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறவுள்ள 'பண்டுங்' மாநாட்டுப் பொன விழாவில கலந்துகொள்ளச்செல்லும் இலங்கை அரசின் உயர்மட்டத் தூதுக்குழு இந்த விடயத்தில் மும்முரமாக ஈடுபடவுள்ளது.

1955ஆம் ஆண்டு இந்தோனேஷிய 'பண்டுங்' நகரில் நடைபெற்ற ஆசிய - ஆபிரிக்க மாநாடு அபபோதைய சூழ்நிலையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவிற்கும், இலங்கைப் பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவலவிற்குமிடையே இம் மாநாட்டில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இதற்கான காரணமாகும்.

இந்த மாநாட்டின் பொன்விழா இன்று இந்தோனேஷியாவின் 'பண்டுங்' நகரில் நடைபெறுவதால் அதில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோர் ஜகார்த்தாவிற்குப் புறப்படவுள்ளனர்.

சுமார் நூறு நாடுகளைச் சேர்ந்த அரச உயா மட்டப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில் பங்குபற்றும் இலங்கைப் பிரதிநிதிகள், ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கான விடயம் குறித்து உலக நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

பொது வேட்பாளரொருவரை இந்தத் தேர்தலில் நிறுத்துவது குறித்தும், இதற்குத் தேவையான ஆதரவு குறித்தும் வெளிவிவகார அமைசசர் லக்ஷ்மன் கதிர்காமர் இங்கு பேச்சுக்களை நடத்துவாரென்று அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இலங்கை இத்தேர்வுக்குத் தனது வேட்பாளராக ஜயந்த தனபாலவை முன்னிறுத்தியிருப்பது தெரிந்ததே.

(க-3)

## சீரற்ற பஸ்சேவை; பொதுமக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

கோகிலாக்கண்டிக்குச் செல்லும் 809 இலக்க பஸ் சேவை சீரின்மையால் இப்பகுதி மக்கள் பெருஞ்சிரமமடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இப்பேருந்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலகம் செல்வோர் அதிகம் பயணம் செய்கின்றனர்.

பயணம் செய்யும் வேளையில் பஸ் அடிக்கடி பழுதடைவதால், பயணஞ்செய்வோர் பலவேறு சிரமங்களை அடைகின்றனர்.

இந்த நிலைமையை நீக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஓ-204)

## சிறுவர் இல்லங்களைப் பதிவுசெய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.22

இதுவரை பதிவுசெய்யப்படாத சிறுவர் இல்லங்களை உடன் பதிவுசெய்யுமாறு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு கேட்டுள்ளது.

இது தொடர்பாகச் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்கும் சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்களுக்கும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பிரதேச செயலகத்தில் இல்லப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. எனவே, இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் அவற்றை உடன் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-204)

# வாசகர் திருமுகம்

## கணக்காளரின் பெயரில் தவறு வாசகர் மன்னிப்புக் கோருகிறார்

'ஓய்வூதியர் பிரச்சினை கணக்காளர் விளக்கம்' என்ற தலைப்பில் தங்கள் பத்திரிகையில் 09.04.2005இல் வெளியான வாசகர் திருமுகம் தொடர்பாகப் பின்வரும் விடயத்தைத் தங்கள் பத்திரிகையினூடாகத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

2005.03.30இல் என்னால் எழுதப்பட்ட "மனிதாபிமானத்தின் பேரில் வேண்டுகின்றோம்" என்ற தலைப்பிலான திருமுகத்தில் "முன்னாள் பருத்தித்துறைப் பிரதேச செயலகக் கணக்காளர்" எனபதற்குப் பதிலாக வெறுமனே "பருத்தித்துறைப் பிரதேச செயலகக் கணக்காளர்" எனக் கடிதக் கணனிப் பிரதியாக்கத்தின்போது ஏற்பட்ட தவறு காரணமாகக் குறிப்பிடப்பட்டுவிட்டது. முதலில் அதற்காகப் பருத்தித்துறைப் பிரதேச செயலகக் கணக்காளர் அவர்களிடமும் எங்களுக்காகத் துணிவுடன் பிரச்சினைகளை வெளிக்கொணரும் உதயனிடமும் மன்னிப்புக்கோருகின்றேன்.

மேலே குறிப்பிட்ட தவறைத் தவிர அத்திருமுகத்தில் குறிப்பிட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் உண்மையானவை. இதற்காக நான் எனது தாயாரின் ஆவணங்களின் பிரதிகளையும் உதயனுக்கு அனுப்பிவைத்திருந்தேன். "ஓய்வூதியர் பிரச்சினை - கணக்காளர் விளக்கம்" என்ற தலைப்பைக் கண்டதும் பல வயோதிப ஓய்வூதியர்களும் முண்டியடித்துக் கொணடு அச்செய்தியை வாசித்தார்கள். ஆனால், அவர்களுக்குக் கிடைத்தது ஏமாற்றந்தான். ஏனெனில், அங்கு ஓய்வூதியர் பிரச்சினைக்கான விளக்கத்திற்குப் பதிலாகக் கணக்காளருக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட பிரச்சினைக்கான விளக்கம் மட்டுமே தரப்பட்டிருந்தது. பருத்தித்துறைப் பிரதேசத்தில் இவ்வாறான நிலையிலுள்ள ஓய்வூதியர்களுக்கு எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டது? அல்லது இப்பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வைக் காணமுடியும்? என்பது போன்ற சமூகப் பெறுமானம் வாய்ந்த கருத்துக்களையும் வழங்கியிருந்தால் எங்கள் ஆணிவேர்களில் ஈரம் கசிந்திருக்கும்.

பொலிகண்டி — தி.சுபாகரன்

## தமிழ்மொழி மூல ஆசிரியர் ஆட்சேர்ப்பு அடுத்த நியமனம் எப்போது?

மாகாணக்கல்வி அமைச்சினால் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு கூடுதலான புள்ளிகள் பெற்றவர்களுக்கு இரண்டு தடவை நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. அதில் முதலாவது தடவையில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவர்களுக்கு ஆசிரிய நியமனம் கடந்த 01.03.2005இல் வழங்கப்பட்டது. ஆனால், ஏனையவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. போட்டிப்பரீட்சைக்கு ஒரேநாளில் தோற்றியிருந்தும் எமக்கு நியமனம் வழங்காது காலத்தை இழுத்தடிப்பதன் உள்நோக்கம் என்ன? இது நியாயமா? மிகவும் மனவேதனையுடன் விரக்தியுற்றிருக்கும் எமக்கு உடனடியாகத் தீர்வு தருவார்கள்?

தமிழ்மொழிமூல ஆசிரியர் ஆட்சேர்ப்பு - 2003 என்றவகையில் விண்ணப்பம் கோரப்பட்டு இன்றுவரை, அதாவது 04.04.2005வரை நியமனம் வழங்கப்படவில்லை.

இது மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பணம்.

புலோலி. — பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில்: எம்.றஞ்சன்.

## சபிக்கப்பட்ட சனங்களின் பாவப்பட்ட பாதை

இடையிடையே இரு புறமும் முட்புதர்கள் மண்டி, இடறி விழுந்தும் கற்களும் கிடங்குகளுமாய், ஆங்காங்கே ஒடுங்கி சமச்சீரற்று விளங்கும் புராதனமான கிரவல் ஒழுங்கையே செம்பிகலட்டி ஒழுங்கை. இது, இடைக்காடு கிராம அலுவலர் பிரிவின் பிரதான தெருவிலிருநது தம்பாலை - கதிரிப்பாய், வளலாய் கிராம அலுவலர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும். குறிப்பாக, விவசாயிகளின் அதிக நடமாட்டமுள்ள குறுக்கு வீதியாகும்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலகத்தின் பராமரிப்பு உருத்துப் பெற்ற இந்த ஒழுங்கையானது, எமது நினைவறிந்த காலத்திலிருந்து எவ்வித புனரமைப்பிற்கும் உட்படுத்தப்படவில்லை. சிரமதானப் பணிகள் மூலமாக ஓரளவிற்கேனும் எப்போதோ இதனைச் செப்பனிட்டிருக்கலாம்தான்!. இந்தக் குறுக்கு ஒழுங்கையின் இரு அந்தத்திலும் செயலதிறன் வாய்ந்த இரு சனசமூக நிலையங்கள் இயங்கிக் கொண்டிருப்பினும் இது கைகூடவில்லை. ஒரு சிலரது அடாத்தான - தான்தோன்றித்தனமான - வீதியோர எல்லை ஆக்கிரமிப்பும், கனிசமானோரின் அப்பட்டமான சுயநலன் சார்ந்த ஒத்துழைப்பின்மையும் இடையூறாய் அமைந்திருந்ததே முக்கிய காரணம். கவனித்துக் கருமமாற்ற வேண்டிய உள்ளூராட்சிச் சபையும் முறையீடுகளை உதாசீனம் செய்து வருவது வழமையாகிப் போனது.

மிக அண்மையில், இரு வாகனங்கள் விலத்தி வழிவிட்டுச் செல்ல இயலாத - குறிப்பிட்ட சில இடங்களில் - தனியொரு பாரவூர்தி நகர முடியாது செருகித் தரித்துவிடக்கூடிய இந்த குறுகிய ஒழுங்கையில் பொறுப்பற்ற விதத்திலும், பொது நலன்களைப் புறந்தள்ளியும் போக்குவரத்துத் தடத்திலேயே மின்கம்பங்கள் நிறுத்துவதற்கான இரு குழிகள் அகழப்பட்டுள்ளன. இதறகான ஆட்சேபனை உடனடியாக உரிய விதத்தில், உரித்துடைய பிரதேச சபை அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்களும் வந்துபோனார்கள்; இவர்களும் போய் வந்தார்கள். தற்போது, அதே இடங்களில் கம்பங்கள் நிறுத்தப்பட்டும்விட்டன.

"கூடிய விரைவில் வீதி விசாலிக்கப்படும்போது நிறுத்திய மின்கம்பங்களைப் பின் நகர்த்திக் கொள்ளலாம்" என்றவாறான சமரசம், பிரதேசசபை செயலாளருக்கும் மின்சாரசபை பொறியியலாளருக்கும் இடையில் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிந்தது. எழுத்து மூலம் அல்லாத இக்கூற்று நடைமுறைச் சாத்தியமானதா?

செம்பிகலட்டி,
இடைக்காடு. — பாவப்பட்ட பாதையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சபிக்கப்பட்ட சனங்கள்.

## உசன்தெற்கு வீதி திருத்தப்படுமா?

ஜே/329 உசன் கிராம சேவையாளர் பிரிவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயச் சந்தியில் இருந்து உசன் தெற்கு ஊடாகச் சென்று கச்சாய்- கிளாலி வீதியுடன் இணையும் வீதி பல வருடகாலமாகத் திருத்தப்படாமல் மிகவும் சேதத்திற்குள்ளாகிக் குன்றும் குழியுமாகவுள்ளது. இவ்வீதியினைப் பயன்படுத்தும் மக்களோ அதிகம். கெற்பேலி, விடத்தற்பளை, உசன் தெற்கு ஆகிய கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், ஏனைய பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இவ்வீதியில் சுமார் ஒன்பது பெரிய பள்ளங்களும் ஓரளவான ஏனைய பள்ளங்களும் இருப்பதால் பாடசாலை செல்லும் மாணவர்கள் சப்பாத்துக்களைக் கழட்டிக் கைகளிலே கொண்டு சீருடைகள் (காற்சட்டை, சட்டை) நனையக்கூடியதாக நடந்து சென்று, பாடசாலைக்கு அண்மையாகச் சென்று சப்பாத்துக்களை அணிந்து செல்லும் அவல நிலையினை நேரடியாகக் காணக்கூடியதாகவுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட சிலருடன் கதைத்தும் எவ்வித விமோசனமும் இல்லை. எனவே, தயவுசெய்து சம்பந்தப்பட்டோர் வீதியினை நேரடியாகப் பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மிகவும் வேதனையுடன் அறியத் தருகின்றேன்.

உசன் தெற்கு. — பேரின்பம்

# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலஎண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in.Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com


## ஆன்மீகச் சொற்பொழிவு

கைதடி,ஏப்.22

ஸ்ரீ சத்தியசாயி உயர்கல்வி படிப்பு பல்கலைக்கழகத்தில் தாவரவியல் பேராசிரியராகப் பணிபுரியும் பேராசிரியர் கா. அனில் குமாரின் விசேட ஆன்மீகச் சொற்பொழிவு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணி தொடக்கம் மாலை 6.45 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருககின்றது.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வட பிராந்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

(3-75)

## வீதி திருத்தம்

குடத்தனை,ஏப்.22

பருத்தித்துறை, ஓராங்கட்டைச் சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் தம்பசிட்டி வீதி திருத்தப்பட்டு வருகின்றது.

இந்த வீதி பாரிய அளவில் குண்டும் குழியுமாக இருந்து வந்தது. இவ்வீதி வடமராட்சியின் பிரதான பாடசாலைகளான பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் பிரதான பாதை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-78)

## 31 ஆம் நாள் நினைவுகளும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19 | 23 |
| – | – |
| 07 | 03 |
| – | – |
| 1932 | 2005 |

அமரர்

# வேலாயுதம் பரமநாதன்


(நயினாதீவு)
(முன்னாள் கணக்காளர், கனகசபாபதி அன் சண்ஸ் மற்றும் ஈஸ்வரா அன் கொம்பனி, யாழ்ப்பாணம்)

அவர்கள் நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், குளப்பிட்டி மற்றும் தெஹிவளையை வசிப்பிடமாகக் கொண்டவரும் 23.03.2005 ஆம் திகதி புதன்கிழமை அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டோருக்கும், தொலைபேசி மற்றும் தந்தி, கடிதங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த உள்ளூர், வெளியூர் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அமரர் சுகயீனம் உற்றவேளை எமக்குச் சகல வழிகளிலும் உதவிய உறவினர்கள் மற்றும் கொழும்புத் தேசிய வைத்திய சாலை "49 வாட்" வைத்தியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் கொழும்பு முகத்துவாரத்தில் இன்று [22.04.2005] வெள்ளிக்கிழமையும் சபிண்டீகரணம் நாளை [23.04.2005] சனிக்கிழமை கொழும்பு கொச்சிக்கடை தம்பையா சத்திரத்திலும் நடைபெறும் என்பதை அறியத் தருவதுடன், இவ்வைபவங்களிலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

9/1, ரூபன் பீரிஸ் மாவத்தை,
களுபோவல, தெஹிவளை.
T.P.: 0112 728903

குடும்பத்தினர்.

(44453) (39-17-29)


உங்கள் குடும்ப வாழ்க்கையை உங்கள் சொந்தக் கண்களால் பாருங்கள். பிறர் சொல்வதைக் கேட்டு நடப்பதால் உங்கள் துணை மனத் துன்பத்துக்கு ஆளாகிச் சித்திரவதைப்படுகிறார். இதனால் உங்கள் குடும்ப வாழ்க்கை சிதறிப் போகக் கூடும்.

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப்படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம்**
**சித்திரவதைப்பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை**
**யோசித்துப் பாருங்கள்.**
**வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க**
**நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை**
**இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

THOMPSON ASSOCIATES

எச்சரிக்கை: உங்கள் குடும்ப வாழ்க்கையை உங்கள் கண்களால் பாருங்கள்! மற்றவர்களின் கண்களால் அல்ல....

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு

உ
சிவமயம்

# கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில்

# புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

## 22-04-2005 வெள்ளிக்கிழமை

### உலகுய்யக் காப்பாய் போற்றி!

வானவர்கள் வந்துதொழும் கூர்தன்னில்
மாதனைப்போர்த் திருப்பதியில் கோயில் கொண்ட
ஞானவடி வேலவனே கந்த வேளே
நலமோங்கு பார்த்திபசித் திரையொன் பான்நாள்
ஆனவெள்ளி அத்தமொடு இடபத் தானம்
ஆரணஆ கமத்துப் பெருஞ் சாந்திஏற்ற
கானவள்ளி குஞ்சரியின் நாதா நின்றன்
கண்ணருளால் உலகுய்யக் காப்பாய் போற்றி!

நீற்றுடனைந் தெழுத்தக்கை மணிசிறக்க
நீலகண்டன் செவிகுளிரப் பொருளுரைத்த
ஆற்றல்மிகு குருதேவா, நினதுகோயில்
அமைப்பதற்குப் பகலிரவு பணிபுரிந்தோர்
ஏற்றமிகு கட்டடங்கள் அமைத்தோர் வண்ணம்
எழிலோங்கச் சித்திரித்தோர், தொண்டர், இன்பம்
ஊற்றெடுக்கும் விதிப்பூசை புரிந்த வேத
உத்தமர்கள் சுகம் செழிக்கக் காப்பாய் போற்றி

கந்தாநின் திருக்கோயில் பரவும் தொண்டர்
கருவினைந்த் துயர்வாழ்வு தருவாய் போற்றி
நொந்தேங்கும் நோய் வறுமை, பகைமையின்றி
நூலறிவால் அறியுமறி வருள்வாய் போற்றி
சந்தோஷ சமாதான மாக மக்கள்
தருமநெறி பயில்வாழ்வை அருள்வாய் போற்றி
செந்தாம ரைச்செல்வி கலையின் செல்வி
சேர்ந்து நலம்புரிய வரம் தருவாய் போற்றி

அருட்கவி சீ.விநாசித்தம்பி (M.A.).



### கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாப் பிரார்த்தனை உரை

சைவப் பெருமக்களாலும் வழிபாட்டு நெறி களாலும் கல்விப்பாரம் பரியத்தினாலும் சிறப்புப்பெற்ற இடம் கொக்குவில் பகுதியாகும். இங்கு அருட்காட்சி தரும் கந்தப்பெருமானின் திருக்கோயில் பழம்பெருமை வாய்ந்ததாகும். நேரம் தவறாத பூசையும் விழாக்களும் இங்கு இடம் பெறுவதை நான் நேரில் கண்டு மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

கந்தப்பெருமான் எங்கள் சொந்தப் பெருமான் என்பதை எல்லாரும் ஏற்றுக்கொள்வர். இந்த வகையில் ''கந்தா சரணம் சரணம்'' என்று கைகூப்பித்தொழுது நிற்பவர் பலரை இங்கு காணலாம்.

மஹோற்சவ காலங்களில் நான் பல தடவைகளில் இங்கு சென்று உரையாற்றியுள்ளேன். எல்லாவற்றிலும் சிறப்பு இவ்வாலய நிர்வாகம் மேற்கொள்ளும் நேரக்கட்டுப்பாடாகும். அந்தணர்களும் அறங்காவலர்களும் ஒரே மனத்தோடு பணிபுரிவது சிறப்பம்சமாகும். தற்போது இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டு இன்று (22-04-2005) வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது உள்ளப்பூரிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, குறிப்பிட்ட இந்த அருட்பணியில் ஈடுபாடு கொள்ளும் அனைவரையும் வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### பிரதிஷ்டா குருவின் ஆசியுரை

முருகன் அடியார்களே,

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருவிழா -

தனக்கும்மேல் நாயகம் இல்லாது தனி நாயகமாக நின்று இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கா புரியின் சிரசு எனக் கருதப்படும் வடபால் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் மாத்தனை எனும் திவ்வியபுண்ணிய ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள கலியுக வரதனாம் கந்தக் கடவுளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். இந்தவேளையில் அடியார்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசித்துப் பேரானந்தம் பெற்று சகல சௌபாக்கியங்களைப் பெற்று வாழ்வீர்களாக.

சுபம்பவது
பிரதிஷ்டாகுரு.
வேதாகம கிரியா ரத்தின ஜோதிடபூஷணம்,
சிவஸ்ரீ நா. நல்லூர் தாஸக்குருக்கள்.

### உன்பதமே சரணடைந்தோம்

*இராகம்: ஆபோகி*

கொக்குவில் மாத்தனைக் கந்தனே வா
முருகையா ஆ.... முருகையா ஆ (கொக்கு)

பன்னிரு விழிகளில் ஓரிரு விழிகளால்
எம்மை நீ பார்த்திடுவாய்
எம் வினை தீர்த்திடுவாய் – என்றும்
உன் அருள் தந்திடுவாய்
உன்னையே நாம் நம்பி வந்தோம்
வருவாய் தருவாய் நன்மை எல்லாம் (கொக்கு)

மாம்பழம் பெற்றிட ஞாலம் எல்லாம்
சுற்றி வலம் வந்த வேல் முருகா
எங்களைக் காத்திடவே என்றும்
ஓடோடி வந்திடுவாய்
உன்பதமே சரணடைந்தோம்
தருவாய் வளம் எல்லாம் அடியார்க்கு (கொக்கு)

## கலியுக வரதனாம் கந்தப் பெருமானின் கருணையால் உருவான கவின்மிகு ஆலயம்

இலங்கைத் தீவின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் அன்பும், பண்பும், குருபக்தியும், தெய்வபக்தியும் நிறைந்து விளங்கும் சைவத் தமிழ் மணம் கமழும் கொக்குவில் கிழக்கில் மாத்தனை என்னும் பதியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிறார் வள்ளி தேவசேன சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான். இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் நம் மூதாதையர்களினதும் காணியில் தான் (மாத்தனைக் கந்தன்) ஆலயம் உற்பத்தியாகியது. இவ்விடத்தில் ஒரு புளியமரமும் ஓர் இலுப்பை மரமும் நின்றன. அவ்விடத்தில் வள்ளலாகிய முருகப் பெருமான் வேலாயுத மூர்த்தமாகத் தோன்றினாராம். அவருடன் வைரவ மூர்த்தியும் தோன்றினாராம்.

முற்காலத்திலுள்ள பெரியோர்கள் தங்கள்தங்கள் பரம்பரையினருக்கு முருகப்பெருமான் தோன்றிய வரலாற்றைக்கூறி, அவர்கள் வாயிலாக மற்றவர்களும் சொல்லக்கேட்டு வந்தார்கள்.

பின்னர், ஆங்கிலேயர் காலத்தில் 1800 ஆம் ஆண்டில் இருந்த கனவான்களினது முயற்சியால் இவ்விடத்தில் ஓர் ஆலயம் அமைத்து வழிபட்டுவந்தனர்.

1907 ஆம் ஆண்டு தம்பாப்பிள்ளை மணியகாரன் அவர்கள் இந்த ஆலயத்தைப் பெரிதாக்கிக்கட்ட எம்பெருமான் கருணை கூர்ந்து மூலஸ்தானம் முதல் அபிஷேக மண்டபம் வரையில் கல்லால் கட்டி, கும்பாபிஷேகம் செய்து நைமித்திய பூசைகளை செவ்வனே நடத்தத் தொடங்கினார்கள்.

அக்காலத்தில் அலங்கார உற்சவம் பத்துத் தினங்கள் நடைபெற்று வந்தன. வாதவூரர்ப்புராணம், கந்தபுராணப் படிப்புகள் வெகுவிமரிசையாக நடந்துவந்தன என்பது குறிப்பிட வேண்டியது. இது இந்த ஆலயத்தின் தனிச்சிறப்பாகும். அப்போதுள்ள சைவப் புலவர்களும், பண்டிதர்களும் பாட்டுப்பயனுக்குப் போட்டிபோட்டுக்கொண்டுவந்து மிகுந்த ஆர்வத் துடன் படிப்பார்கள்.

இக்கோயில் சிறியகோயிலாக விளங்கிய காலத்தில் இங்கிருந்த பிள்ளையார் விக்கிரகம் மிகச்சிறியதாகவிருந்தது. நயினாதீவு சுவாமி என்னும் தவயோகியின் ஆலோசனைப்படி ஓரளவு பெரிய பிள்ளையார் விக்கிரகம் செய்யப்பட்டது. அதன் பின்னர் கும்பாபிஷேகம் 1942 இல் நடைபெற்றது.

1947 ஆம் ஆண்டு அக்கால முகாமையாளராகவிருந்த டாக்டர் கனகரத்தினம் அவர்கள் தம் பிற்சந்ததியினர் ஓங்கிவளர வேண்டும் என்னும் நல்லநோக்கம் கருதியும் கோயில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்னும் அவாவினாலும் பரிபாலனசபையை உண்டாக்கினார்கள். பரிபாலனசபை பொறுப்பேற்று நடத்திவரும் காலத்தில் அலங்கார உற்சவம், நவராத்திரி, சிவராத்திரி, ஐப்பசி வெள்ளி உற்சவம், திருவெம்பாவை உற்சவம் முதலான உற்சவங்களையும் விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடு முதலானவைகளைச் செய்தும் செய்வித்தும் வழிபட்டு வந்தார்கள்.

1961ஆம் ஆண்டின் பிற்பகுதியில் திருப்பணி வேலைகள் நடைபெற்று 1962ஆம் ஆண்டில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அலங்காரத் திருவிழாக்கள் நடைபெற்ற இந்த ஆலயத்தில் 1967 ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றப் பெருந்திருவிழாக்கள் ஆரம்பமாயிற்று. இப்போது ஆனி உத்தரத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறத்தக்கதாகப் பன்னிரண்டு திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. 1969ஆம் ஆண்டு நடேசப்பெருமானும் ஆலயமும், அதன்முன் மண்டபக் கூரை வேலையும் செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1975 ஆம் ஆண்டு ஆறுமுகசுவாமி விக்கிரகம், விநாயக விக்கிரகம் ஆகியவை பஞ்சலோகத்தினால் செய்யப்பட்டு தேர்த்திருவிழாவின் போது பவனி வருகிறார்கள். விநாயகப் பெருமானுக்கும் ஆறுமுகப் பெருமானுக்குமாக இரு திருத்தேர்கள் இருக்கின்றன.

பல்லாண்டு காலமாக இக்கோயிலின் கர்ப்பக் கிரகத்தில் வேல் மட்டுமே இருந்தது. முருகமூர்த்தி (வள்ளியம்மை தெய்வயானை சமேதராக) 1981ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் புதிய வசந்தமண்டபமும் கோயிலின் உட்பிரகாரத்தைச் சுற்றிக் கொட்டகைகளும் காலத்துக்குக்காலம் வசதியைப் பொறுத்து அமைக்கப்பெற்றது.

திருவிழாக் காலங்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தில் சூரன் போர்த் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அத்துடன், திருவாசக முற்றோதலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மாணிக்க வாசக திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு குருபூசையும் நடைபெற்று வருகிறது.

2000 ஆம் ஆண்டில் லக்குமி நாராயணர், அம்மன் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. எழுந்தருளி அம்மனும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இப்போது பல திருத்த வேலைகள் செய்யவேண்டும் என்ற நோக்கில் 09/02/2004 இல் பாலஸ்தாபனம் செய்து சண்டேஸ்வரரும் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. சந்தான கோபாலரும் பஞ்சலோகத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்டு இன்று (22/04/2005 )இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

இன்று நடைபெறும் இந்தப் பெருஞ்சாந்தி விழா கொக்குவில் திருப்பதிக்கு மட்டுமல்ல இந்தப் பார் முழுமைக்கும் பேரானந்தப் பேரருள் பயக்க வேண்டும் என்று சுப்பிரமணியப் பெருமானைப் போற்றிப் பிரார்த்திக்கின்றோம்.

**த. யோகேஸ்வரன் , பொருளாளர்,**
**ஆலய பரிபாலன சபை, மாத்தனை.**

### பெருஞ்சாந்தி கண்டு மனச்சாந்தி காண்போம்

எங்கள் கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமியார் இன்று திருக்குடமுழுக்கு காண்கிறார் என்பதை நினைக்க நெக்கு நெக்குருகி நெஞ்சம் குழைகிறது. இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுச் சிறப்புடைய மாத்தனையானுக்கு 09-02-2004 இல் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்து இன்றுவரை பொறுத்திருந்து பொறுமைக்குப் பரிசாகக் குடமுழுக்குத் தரிசனம் காண்கிறோம்.

ஒரு கும்பாபிஷேகத் தரிசனம் பன்னிரண்டு மஹோற்சவப் பலனுக்கு நிகராகும். நாட்டுச் சூழல் முதலான பல்வேறு இடையூறுகளிலும் எம்மைக் காத்த எங்கள் சொந்தக்கடவுளாகிய மாத்தனை கந்தக்கடவுளின் பேரருளும் பெருங்கடாட்சமும் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும்.

சுமித்ர சண்டேஸ்வரர் திருவுருவம் பிரதிஷ்டை செய்யும் அதேநேரம் சந்தான கோபால சுவாமிகளின் எழுந்தருளி மூர்த்தமும் பிரதிஷ்டை செய்யப்படுவது ஆனந்தமளிக்கிறது. நெல்லி, அரசு, வேம்பு, வில்வம், வன்னி, பன்னீர், திருவாத்தி, ஆதியாம் விருட்சங்கள் நிழல்செய்ய ஆனி உத்தர தரிசனம் தீர்த்தமாக அமைய அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் மாத்தனையான் எங்கள் எல்லோருக்கும் நிழலாகவும் பற்றுக்கோடாகவும் அருள் செய திருப்பாத பத்மங்களைப் போற்றிப் பணிவோம்.

இவ்வினிய திருக்குடமுழுக்கு விழாவினை அருள் சுரக்க இயற்றுகின்ற பரிபாலன சபையைச் சேர்ந்தவர்களுக்கும் அந்தண உத்தமர்களுக்கும் அடியார்களுக்கும் எமது அன்பையும் நன்றியையும் பிரார்த்தனையையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

சுபம்!
**அ. விநாயகமூர்த்தி**
தலைவர்,
மாத்தனை, ஆலயப் பரிபாலனசபை.

(44455) (26-18-16)

## நெடுந்தீவில் பற்சிகிச்சை

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அடுத்த மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் பற்சிகிச்சை நடைபெறுமென யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். பிரதி சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ள இச்சிகிச்சையை நடத்துவதற்குக் காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலையில் கடமைபுரிந்துவரும் டாக்டர் கே.அகிலன் அங்கு செல்லவுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-51)


## அறிவித்தல்

**மாநகரசபை, யாழ்ப்பாணம்**
**ஒப்பந்தகாரர்களைப் பதிவுசெய்தல்**
**கால நீடிப்பு**

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகள், பெட்டி மதகுகள் வடிகால்களைப் புனரமைப்பதற்கும் கட்டடங்களைப் புனரமைப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும்.

★ அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள்
★ 'இக்ராட்' பதிவுள்ள ஒப்பந்தகாரர்கள்

யாழ். மாநகர சபையில் தங்களை ஓர் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்துகொள்ளுமாறு 31.03.2005, 01.04.2005 பத்திரிகை விளம்பரத்தில் அறிவிக்கப்பட்ட கால எல்லை 30.04.2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
(சி-42432) (24-14-15-26)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 18 - 05 - 1952



ஆண்டவன் அடியில் 11 - 03 - 2005

**அமரர் முருகுப்பிள்ளை அச்சுதானந்தன்**

அன்புடனும் பண்புடனுடம் ஆதரவளித்தவரே
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குலவிளக்கின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவிய அயலவர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, கடிதமூலம் அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தோருக்கும் எமது நன்றிகள்.

நளைமறுதினம் (24-04-2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* *இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

புதுவளவு,
வல்வெட்டித்துறை.
(44420)(26-14-15)

- குடும்பத்தினர்
(கோபிகிருஷ்ணர், உடுப்பிட்டி).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 04 - 04 - 1945



விண்ணில் 23 - 03 - 2005

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் செல்லத்துரை யோகேஸ்வரநாதன்**

(பதில் செயலாளர், வலி. கிழக்கு தென்பகுதி
பல நோ. கூ. சங்கம், நீர்வேலி)

ஆசைக்கொரு தலைவனாய், அன்புக்கொரு தந்தையாய்,
பாசத்துக்கொரு பண்பாளனாய், பல கலைகளிலும் பல
துறைகளிலும் நானிலம் போற்றும் அறிஞனாக வாழ்ந்து மறைந்த
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாரண வருடம் 23.03.2005 இல் சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதி நிகழ்வுகளின்போது நேரில்வந்து அஞ்சலி செலுத்த அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும் இரங்கலுரை கூறி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிகள் ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இன்று (22.04.2005) வெள்ளிக்கிழமை முற்பகலில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன.*

V.T. செல்லத்துரை வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
(44403)(39-14-15-26)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## மகாசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

நாரந்தனை, சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் மகாசபைக் கூட்டமும் உபயகாரர் கூட்டமும இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாகாசபைக் கூட்டமும் திருவிழா உபயகாரர் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (3-202)

## வாள் வெட்டில் மூவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.22

புகையிரத நிலைய வீதிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவமொன்றில் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமாலை 4.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான தருமப்பிரகாசம் தவராசா (வயது -35), அவரது மனைவியான தவராசா புளோரிடா வசந்தினி (வயது-29), எஸ்.சகாயராஜா (வயது-14) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரும் நேற்று மாலை யாழ். போதனாவைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். (ஒ-12)

## வெளிச்சம் வெளிவந்துள்ளது

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் தொண்ணூறாவது இதழ் வெளிவந்துவிட்டது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, த.ஜெயசீலன், கணனிக்கவி, பாட்டுக்குயில், சோ.சி.கலைக்கதிர், ந.தகையன், யோ.கர்ணன், இளைய அப்துல்லாஹ் ஆகியோரின் கவிதைகளும் செங்கை ஆழியான், ஞானரதன் ஆகியோரின் தொடர் கட்டுரைகளும் யதீந்திரா, பொன்.பூலோகசிங்கம், மலைமகள், அ.அன்ரனி ஆகியோரின் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

அத்துடன் சாந்தன், ஆதிலட்சுமி சிவகுமார், உடுவில் அரவிந்தன் ஆகியோரின் சிறுகதைகளும் கவிஞர் சு.வில்வரெத்தினத்துடனான நேர்காணலும் நாட்டுப்பற்றாளர் வேகரம்பு ஆசிரியர், நாட்டுப்பற்றாளன் விழிசிட்டி க.சிவராஜா, அரங்கக்கலைஞன் நா.சுந்தரலிங்கம் ஆகியோருக்கான அஞ்சலிகளும், குறிப்புகள், புதிய வரவுகள் இன்னும் பலவும் இடம்பெற்றிருக்கின்றன. இத்துடன் சுனாமி அனர்த்தத்தின் புகைப்படச் சுவடுகளை நிறையத் தாங்கியும் இந்த இதழ் வெளிவந்துள்ளது. (3)

## பட்டதாரிப் பயிலுநர்கள் குழப்பம்

வேலை வாய்ப்புக்கு விண்ணப்பித்த பட்டதாரி பயிலுநர்களின் விண்ணப்பங்கள் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனால் பட்டதாரிப்பயிலுநர்கள் குழப்பமடைந்துள்ளனர். பட்டதாரிப் பயிலுநர்கள் தாம் பணியாற்றும் நிறுவனத் தலைவர் ஊடாக மாகாணத் திணைக்களங்களுக்கு வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்களை அனுப்பிவைத்திருந்தனர்.

இந்த விண்ணப்பங்கள் அந்தந்த மாகாணத் திணைக்களத் தலைவர்களின் சிபார்சுடன் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

ஆனால், தற்போது மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தாம் அவ்வாறு விண்ணப்பம் கோரவில்லை எனக் குறிப்பிட்டு விண்ணப்பங்களை விண்ணப்பதாரருக்கே திருப்பிஅனுப்பியுள்ளார்.

விண்ணப்ப முடிவுதிகதியின் பின்னர் விண்ணப்பங்கள் திரும்பி வந்ததால் விண்ணப்பித்த பட்டதாரிகள் செய்வதறியாதுள்ளனர்.

மாகாண திணைக்களத்தினர் விண்ணப்பித்த திணைக்களத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பாமல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு விண்ணப்பங்களை அனுப்பியதாலேயே அவை திருப்பி அனுப்பப்பட்டிருக்கலாமென பாதிக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் சந்தேகம் தெரிவித்தனர்.

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத் தலைவரின் சிபார்சிற்கு அனுப்பப்பட்ட அனைதது விண்ணப்பங்களும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - சில திணைக்களங்களிலிருந்து நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் பட்டதாரி பயிலுநர்களுக்கு கிடைத்துள்ளது என்றும் அறியமுடிகிறது. (ஒ-117)


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

எம்மிடம் 45 நாள்கள் வளர்ந்த
அல்சேஷன் நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.கண்ணன், பிரசாத் றோட்,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.
(44435) (39) T.P.0777 392371



**வண்ணார்பண்ணை- காட்டுத்துறை**
**பகவதி மாரி அம்மன் கோயில்**
**அலங்கார உற்சவம்- 2005**

*அம்மன் அடியார்களே!*


மேற்படி ஆலய அலங்கார விசேட உற்சவங்கள்
பின்வரும் திகதிகளில் நடைபெறும்.
24.04.2005 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 02.05.2005
திங்கட்கிழமை வரை தினமும் மாலை 6.00 மணிக்கு
ஸ்நபன அபிஷேகமும், விசேட பூசையும் நடைபெற்று
அம்பாள் வீதி உலாவரும் உற்சவமும் நிகழும்.
29.04.2005 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்குத்
தண்டிகை உற்சவம் 03.05.2005 செவ்வாய்க்கிழமை
(10 ஆம் நாள்) பகல் 11.00 மணி- அஷ்டோத்தரசத
சங்காபிஷேகம், மாலை 6.00 மணி- அலங்கரிக்கப்பட்ட
சிங்க வாகனத்தில் அம்பாள் தெருவீதி உலா
வருங்காட்சி இடம்பெறும்.

அடியார்கள் வருக! அம்மன் அருள் பெறுக!

(சி-42410) (39-14-15-26)
– தேவஸ்தானம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 - 10 - 1929



இறப்பு 04 - 05 - 2004

**அமரர் ஐயாத்துரை இரத்தினசிங்கம்**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
திதி 23.04.2005

அன்புடனும் ஆதரவுடனும் பண்புடனும் வாழ்ந்தீர்
இன் முகங்காட்டியே எங்களுடன் பழகினீர்
எம்மைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எப்போதும் எம் நெஞ்சை விட்டு
அகலவே அகலாது!

*நாளை (23.04.2005) சனிக்கிழமை வீட்டில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

ஓடை ஒழுங்கை,
சவனாய்,
பருத்தித்துறை. (c/42411)(32-14-15-26)

– மனைவி, பிள்ளைகள்.

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 - 07 - 1938



இறப்பு 22 - 04 - 1986

புதிய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

**வெஞ்சமின் மேக்கஸ்**

ஆண்டுகள் பத்தொன்பது ஆனாலும்
ஆறாதே நெஞ்சம்
பிரிவு இப்போதும் எம்மை வாட்டுகின்றதே!
அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
எமலினம்மா– பாசமிகு மனைவி
பொஸ்கோ, கொண்செஸ்ரா, யூலியஸ், றெஜி– பிள்ளைகள்.
சாந்தினி, பேக்மன், பச்சை, ஜீன் – மருமக்கள்
முதல்வன், இனியவன், ஜெனி, றொசானி, றொகான்,
நிசானி, குவாரினி, யூலியோ, றெறான், ஸிவினியா,
வைரியா– பேரன்மார், மதுஷா– பூட்டன்.

23, புதிய பூங்கா வீதி, குருநகர். (44466)(39-14-15-26)

# யாழ்.போதனா மருத்துவமனையில் 'லிப்ற்' இன்றி நோயாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆண்களுக்கான 7 ஆம், 8ஆம், 9 ஆம், 10 ஆம் வார்ட்டுகளுக்கு மின்தூக்கி வசதி இல்லாதுள்ளது. இதனால், நோயாளர்களை மாடிப்படி வழியாகத் தூக்கிச் செல்கின்ற அவலநிலை நிலவுகின்றது. இதனால் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த விடுதியில் மின்தூக்கி வசதிக்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுள்ள போதும் மனிதூக்கி இயந்திரம் நீண்டகாலமாகப் பொருத்தாமையினால இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளிகளை மேற்படி வார்ட்டுகளுக்கு தூக்கிச் செல்வதற்காக ஊழியர்கள் பலருடைய உதவியை நாட வேண்டியுள்ளது.

அத்துடன், நோயாளியை மேலே தூக்கிச் செல்லும் சமயத்தில் அவர் தவறி விழும் வாய்ப்பும் உள்ளதாக அஞ்சப்படுகிறது. இந்த அவல நிலையைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

(ஒ-13)



யாழ். போதனா வைத்தியசாலையில் மாடிப்படிவழியே நோயாளர் ஒருவரைத் தூக்கிச் செல்கின்றனர். (படம்:கவிதரன்)

## சமுர்த்தி சபைக்கு தலைவர் தெரிவு

தென்மராட்சி,ஏப்.22

சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவராக மரிய அருளானந்தம் மரிய பேணாட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில கடந்த திங்கட்கிழமை ம.விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தெரிவு இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி அரசியல்துறைப பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் க.இராசதுரை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

(ஒ-117)

## கைதடி – கோப்பாய் வீதிக்கு மின் விளக்குகள் பொருத்தவேண்டும்

கைதடி,ஏப்.22

வீதி விளக்குகள் இல்லாமையினால் கைதடி-கோப்பாய் வீதியால் இரவு வேளைகளில் பயணம செய்வோர் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும் கண்டி வீதி வழியாக வரும் வாகனங்கள் நாவற்குழிப் பாலமூடாகவே யாழ். நகரை நோக்கிச் சென்றன. தற்போது பாலத்தில் திருத்த வேலைகள் நடைபெறுவதினால் யாழ் நகருக்கான போக்குவரத்துகள் யாவும் கைதடி - கோப்பாய் வீதியூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இரவு வேளைகளில் கோப்பாய் வீதியால் செல்லும் வாகனங்களும் பாதசாரிகளும் வீதி விளக்குகள் இல்லாததினால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, திருட்டுக்களும் இரவு வேளைகளில் அந்த வீதியில் இடம்பெற வாய்ப்புள்ளதனால் இந்த வீதிக்கு இரவு நேர மின் விளக்குகளை உடனடியாகப் பொருத்துமாறும் அப்பகுதி சனசமூக நிலையங்கள் சம்பந்தப்பட்டோரைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரமும் கைதடி-கோப்பாய் வீதியில் இரவு வேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர் பாதசாரி ஒருவரை மோதிக் காயப்படுத்திவிட்டு தப்பியோடியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(ஒ-75)

## உலக வங்கி நிதி உதவியுடன் மட்டுவிலில் வீட்டுத் திட்டம்

சாவகச்சேரி,ஏப்.22

உலக வங்கியின் நிதி உதவியுடன் மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக பயனாளிகள் தெரிவு தொடர்பான ஆரம்ப மதிப்பீட்டுத் திட்டம் மட்டுவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வழிகாட்டியாக அந்தப் பகுதி கிராம சேவையாளர் பணிபுரிவார். இத்திட்டத்திற்கு உறுதுணையாக - தென்மராட்சி பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கிராமிய புனரமைப்புக் குழுவினர் செயற்பட்டுவருகின்றனர்.

இக்குழுவினர் வீடு வீடாகச் சென்று இத்திட்டத்திற்கான புள்ளிவிவரங்களை இதற்கான படிவம் மூலம் திரட்டிவருகின்றனர்.

இப்பகுதிகளில் கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் பலரும் வீடுகள், உடைமைகள், சொத்துக்களை இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-31)

### சுனாமியால் பாதிக்கப்பட்ட

## தென்னை வள கூ.சங்க பணியாளருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.22

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளிலுள்ள பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு கூட்டுறவுச் சமாசம் தலா 2 ஆயிரம ரூபா வழங்கி வருகின்றது.

சமாசத்தின் சமூக மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கப்படும் இக் கொடுப்பனவானது முதற்கட்டமாக கடந்த திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

நிதி வழங்கும் நிகழ்வில் சமாசத் தலைவர் கி.தவராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஐயாத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய இடங்களிலுள்ள சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் நிதி வழங்கப்படவுள்ளது.

(ஒ-202)

### காரைநகர் பிரதேசத்தில்

## மயிர்கொட்டி தொல்லையை ஒழிக்க உடனடி நடவடிக்கை

காரைநகர்,ஏப்.22

காரைநகரில் மயிர்கொட்டி தொல்லையை ஒழிக்க உடனடி நடவடிக்கை அவசியம்.

இவ்வாறு காரைநகர் உதவி அரச அதிபர் அலுவலகம் காரைநகரில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைக் கடிதம் மூலம் கோரி உள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் கிராம உத்தியோகத்தர், பொது சுகாதார உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், அப்பகுதியில் உள்ள பாடசாலைகளின் கல்விச் சமூகத்தினர், உள்ளூர் சங்கங்களின் அங்கத்தவர்கள் போன்றவர்கள் அடங்கிய குழுவை ஏற்படுத்துமாறும் -

அதன் மூலம் இம்மாத முடிவுக்குள் முற்றாக மயிர்கொட்டி அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறும் - வேண்டிக்கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-73)

## கலைப்பெருவிழாவையொட்டி சங்கானையில் போட்டிகள்

சங்கானை,ஏப்.22

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள தேசிய இலக்கிய கலைப்பெருவிழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் வலிமேற்குப் பிரதேச செயலர் பிரிவிலும் இடம்பெறவுள்ளன.

வரையறைக்குட்பட்ட கட்டுரைப் போட்டி (சிரேஷ்ட/கனிஷ்ட/அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குரியது), திறந்த கட்டுரைப் போட்டி, சிறுகதைப் போட்டி, திறந்த குறு நாடகக் கையெழுத்துப் பிரதிப் போட்டி, சகலருக்குமான சித்திரப் போட்டி, சகலருக்குமான நாட்டுப்புறப்பாடல் போட்டி மற்றும் கலை நிறுவனங்களின் நடனப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கான ஆக்கங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர், வலி.மேற்கு பிரதேச செயலகம், சங்கானை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பாடசாலை விடுமுறைக் காலமானதால் மாணவர்களுக்கு மட்டும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விண்ணப்ப முடிவுதிகதி நீடிக்கப்பட்டுள்ளதாகவும் -

மேலதிக விவரங்களுக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-29-202)

## இலவச கண்சிகிச்சை முகாம்

காரைநகர்,ஏப்.22

காரைநகர் பிரதேசத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்று காரைநகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை நடைபெறவுள் ளது.

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகமும் கோண்டாவில் கிழக்கு சிவபூமி சிறுவர் மனவிருந்திப் பாடசாலையும் இணைந்து நடத்தும் இந்த இலவச கண்சிகிச்சை முகாமில் கண் சிகிச்சையுடன் விழிவெண்படலக் குறைபாட்டால் (கற்றாக்) பாதிப்புற்ற மக்களுக்கு கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன ஆலோசனையும் அதற்கான சிகிச்சையும் வழங்கவுள்ளார்.

(ஒ-73)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வேம்பன் இந்து மயானத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.22

உரும்பிராய் வேம்பன் இந்து மயானம் பராமரிப்பற்று சீர்குலைந்த நிலையில் உள்ளதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் கீழ்வரும் இந்த மயானம் பரந்த நிலப்பரப்பைக்கொண்டது அதற்குள் கொல்களம், கிணறு, மயானத்துக்கு வருவோர் ஓய்வெடுக்க கொட்டகை, தகன இடம் என்பன உள்ளன. ஆனால் அவை பராமரிப்பற்ற நிலையில் உள்ளன.

இந்த மயானத்திற்குத் தகனக்கிரியைகளுககாக வருபவர்கள் தங்கிச் செல்ல கொட்டகை உள்ளது. மேற்படி கொட்டகைக்கு சிமெந்துத் தகடுகளாலான கூரை போடப்பட்டுள்ளது. அவையும் சேதமடைந்துள்ளன.

மயானத்திற்கு அருகில் கொல்களம் இருப்பதால் அங்கு இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகள் மயானத்துக்குள் இடப்பட்டுள்ளன. இதனால் சுகாதாரக்கேடு உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மயானத் தேவைக்காக உள்ள கிணறும் பாவனைக்கு உதவாத நிலையில் கழிவுகளால் நிரம்பியுள்ளது.

தகனக்கிரியை செய்யுமிடத்தில் கொட்டகை இல்லாததால் மழைகாலத்தில் சடலங்களை தகனம் செய்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகம் மயானத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதியை சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஒ-185)

## சேதமடைந்த தராசுகள் சந்தைகளில் பாவனை

வலி.தென்மேற்கு,ஏப்.22

குடாநாட்டில் உள்ள சந்தைகள் சிலவற்றில் விற்பனையில் ஈடுபட்டு வரும் வியாபாரிகளில் சிலர் சேதமடைந்த தராசுகளைப் பயன்படுத்துகின்றனர் என்றும் -

காய்கறிகளை சேதமடைந்த தட்டிலும் நிறுவைப் படியை நல்ல நிலைமையிலுள்ள மற்றைய தட்டிலும் வைத்து விற்பனை செய்கின்றனர் என்றும் - பொதுமக்கள் தரப்பில் குறை கூறப்படுகிறது.

இதனையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பாவனையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஒ-135)



கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையின் விளையாட்டுவிழா அண்மையில் இடம் பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட செல்வி சறோஜினி வேதநாயகம் மங்கள விளக்கேற்றுகிறார். சிறப்பு விருந்தினர்களான நா.சுவாமிநாதன், முன்னாள் அதிபர் கு.சிவபாதசேகரம், பிரம்மஸ்ரீ நா.கார்த்திகேயசர்மா, ம.ஜெயந்திரன், உப அதிபர் திருமதி ம.குலசிங்கம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பழைய ஓடுகளும், 2 வீணைகளும் விற்பனைக குண்டு. தொடர்பிற்கு: 39, பிறவுண் றோட், யாழப்பாணம். T.P.: 021 222 2390. (44507)

S.L.T. தொலைபேசித் (வர்த்தகர்களுக்கான) தொடர்பு யாழ்நகருக்குள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 0714811927. (44484)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்டதும் தடுப்பூசி ஏற்றப்பட்டதும் 2 மாதங்கள் நிறைந்ததுமான **Pure Doberman Pinchar** நாய்க்குட்டிகள் விற்பனைக குண்டு. தொடர்பு: 55/1, பழம்றோட், யாழ்ப்பாணம். T.P.: 021 222 3847. (44485)

## தவறிவிட்டது

மகேந்திரம் கிருஸ்ணகுமார் என்பவரது அடையாள அட்டைகள் நேற்றுமுன்தினம் (20-04-2005) புதன்கிழமை காலை யாழ்.இந்துக கல்லூரிக்கும் யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும். (சீ-42438)

## உடன் தேவை

**பருத்தித்துறையில் இயங்கும் கணனி நிலையமொன்றிற்கு Hard ware தெரிந்த ஆண் ஒருவரும் Ms Office தெரிந்த பெண்களும் உடன் தேவை.**

**தொடர்பு: வி.இல. 2563,**
**மே/பா உதயன்,**
**யாழ்ப்பாணம்.**
(44491)





## ஆன்மீக நிகழ்வு

திருநெல்வேலி பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை சனிக்கிழமை அதிகாலை 5மணி தொடக்கம் ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

அதிகாலை நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவடையும். (ஒ-203)

## உலக வங்கிக்குழு வன்னி விஜயம

உலக வங்கியின் உயர்மட்டக் குழுவொன்று இன்று வன்னிப் பெருநிலப்பரப்புக்கு வருகை தரவுள்ளது.

நியாப் II வேலைத் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தரவுள்ள இக்குழு, கிளிநொச்சி மாவட்டத்தின் நாகேந்திரபுரம் கிராமத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொல்விளான் கிராமத்திற்கும் நேரில் சென்று பார்வையிடவுள்ளது. கிளிநொச்சி செயலகத்தில் உயர் மட்டத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றையும் இக்குழு நடத்தவுள்ளது. (ஒ-352-202)


# திருமண வாழ்த்து



## சஞ்ஜிதன் சுமதி

**பங்குனி முப்பதாம் நாள் சம்பிரதாய மணத்தில் கலந்து இன்பமுடன் தம்பதியராய் இணைந்த**
**சஞ்ஜிதன் - சுமதி**
என்னும் தம்பதியர் சித்திரை இருபத்தியிரண்டாம் நாள் சட்டபூர்வமாக இணையும் இந்நாளில் இன்றுபோல் என்றும் இனிமையுடன் பல்லாண்டு காலம் பல்பேறும் பெற்று வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம்.

முதலாம் கட்டை,
கல்வயல், சாவகச்சேரி.

**- நண்பர்கள்.**
(44521)(26-14)

# இலவச கண் சிகிச்சை முகாம்

We Serve

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகமும் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையும் இணைந்து நடத்தும் விழிவெண்படலக் குறைபாட்டால் பாதிப்புற்றவர்களுக்கான இலவசக் கண் சிகிச்சை முகாம். பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் S.குகதாசன் அவர்களால் நடத்தப்படும்.

இடம்: காரைநகர் இந்துக்கல்லூரி
திகதி: 23-04-2005
காலம்: 7.30 - 9.30 மணி வரை.

அனுசரணை: **சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்,**
**70/1, மானிப்பாய் வீதி,**
**வைத்தீஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம்.** (44517)(26-14)

# இனி நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை

❖ தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போரே!
உங்களுக்கு ஒரு பொருத்தமான வேலை கிடைக்கவில்லையா?
❖ தொழில் நிறுவனங்களே!
உங்களுக்குப் பொருத்தமான வேலையாள்கள் கிடைக்கவில்லையா?

## கவலையை விடுங்கள்

இதோ :-

"உங்களுக்கு உதவ நாங்கள் தயாராகி விட்டோம்."

யாழ். நகரில் முதன் முறையாக தொழில் வழங்குநரையும் தொழில் எதிர்பார்ப்போரையும் தொடர்பு படுத்தும் ஒரு புதிய முயற்சி.

❖ பதிவுகள் மேற்கொள்ளும் ஒழுங்கில் தகைமைக்கேற்ப வேலைகள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.
❖ உங்கள் தொழில் நிறுவனங்களில் உள்ள எத்தகைய வேலைக்கும் பொருத்தமானவர்களை எம்மால் பெற்றுத் தரமுடியும்.
❖ கொழும்பு மற்றும் பிற இடங்களில் வேலை செய்ய விரும்புவோரும், வேலை ஆள்களை எதிர்பார்க்கும் நிறுவனங்களும், தனிப்பட்டோரும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

**FIRST MAN POWER CENTRE**
**&**
**JOB AGENTS**

T.P.: 021-2223298,
0777 252098,
0773068984

முகவரி:
POWER GYM BUILDING,
230/1, நாவலர் வீதி,
ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்.
யாழ்ப்பாணம்.
(44513)(30-14-26)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
22 - 04 - 1950



உதிர்வு
03 - 05 - 2004

## திருமதி கமலாதேவி இராமலிங்கம்

திதி: 23-04-2005

*அமரராகிவிட்ட எங்கள் ஆருயிர் தலைவியே!*
*அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிச்சுடரே!*
*எம்மில் அனைத்துமாய் நிலைபெற்று ஆதரித்துச்*
*சீராய் சிறப்பாய் வாழவைத்த தெய்வமே!*
*குடும்பத்தின் கோபுரமாய் ஒளிச்சுடராய்*
*பிரகாசித்து எம்மைவிட்டுப் பிரிந்து*
*ஒரு வருடம் ஆகிவிட்டதே!*
*இதயத் தெய்வமாய் வீற்றிருந்து துணைபுரிந்தீரே!*
*எப்பிறப்பு எடுத்தாலும் அப்பிறவியெல்லாம்*
*உங்கள் சாந்தியே ஒளியென உணர்வாய்*
*உங்கள் எதிர்பார்ப்புகளுக்கு இணங்க*
*எம்மால் இயன்றவரை வாழ்வோம்*
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.*

நா.இராமலிங்கம் (சந்திரன்),
துரையன் செம்மாடு,
வல்வெட்டி.
(44506)(26-14)

நீங்காத நினைவுடன்:
**அன்புத் தாய், கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

# edexcel — BTEC

advancing learning, changing lives

Edexcel is the largest awarding body in the UK. It develops a diverse range of academic and vocational qualifications, prepares course specifications, assesses, examines and provides quality control of qualifications and certifies achievement. In the UK Edexcel qualifications are offered by over 4,200 secondary schools, 450 further education colleges, more than 80 higher education institutions, 800 public and private sector employers and, increasingly, e-learning providers. Internationally, Edexcel operates in 112 countries worldwide.

The organisation's strengths include the diversity of its products across academic and vocational sectors and more than 28 years' pedigree in providing 'Qualifications for Work'.

## ADMISSION ANNOUNCEMENT FOR ACADAMIC YEAR 2005/ 2006
## HIGHER NATIONAL DIPLOMA ( HND )

✓ ***What is a BTEC Higher National?*** The BTEC Higher National is one of the best-known BTEC qualifications that we offer. It's an undergraduate qualification that is roughly equivalent to the first half of a degree. People have tended to study a BTEC Higher National after a BTEC National.

✓ ***How many do I study?*** You only study for one BTEC qualification at a time. This lets you build and focus your knowledge and skills in a particular area.

✓ ***Where can I study for a BTEC Higher National?*** You can study for a BTEC Higher National at your nearest approved centre. To find out which one is closest to you, please contact your local Edexcel regional office.

✓ ***What can I do after I finish a BTEC Higher National?*** Most students will complete their degree after their BTEC Higher National. They can join in 3rd year of the degree program. They have the option to continue their degree in Srj Lanka, UK, USA, Canada, Australia and New Zealand. Others prefer to go straight into work when they've finished a BTEC Higher National – it gives you the right level of skills and knowledge to make a difference whatever subject you've studied.

✓ ***Who normally takes a BTEC Higher National?*** Anyone can take a BTEC Higher National – we would expect that students aged around 18 would be interested, as well as people at work who may want to get back into education, or who simply want to update or develop new skills that they can use at work.

✓ ***Will a BTEC Higher National get me a better job?*** BTEC Higher Nationals are well-recognised by universities and employers. So, whether you want to do a degree or earn money straight away, there's a BTEC Higher National for you.

### Computing

| Unit code | Title |
|---|---|
| H1 21404P | Computer Platforms |
| H1 21405P | System Analysis& Designing |
| H1 21406P | Software Construction& Tools |
| H1 21407P | Computing Solution |
| H2 21408P | Quality Management Principles |
| H2 21409P | Communication Technology |
| H1 21411P | Networking |
| H1 21412P | Data Analysis and Design |
| H1 21413P | Visual Programming |
| H1 21416P | Introduction To Programming |
| H1 21418P | Computer Implementation Project |
| H2 21419P | Database Management System |
| H2 21421P | Website Management |
| H2 21423P | Object Oriented Programming |
| H2 21426P | Advanced Project |

**ELIGIBILITY**
2 Passes in A/L
Duration : 18 Months (Full time)

### Software Engineering

| Unit code | Title |
|---|---|
| H1 21404P | Computer Platforms |
| H1 21405P | System Analysis& Designing |
| H1 21406P | Software Construction& Tools |
| H1 21407P | Computing Solution |
| H2 21408P | Quality Management Principles |
| H2 21409P | Communication Technology |
| H1 21411P | Networking |
| H1 21412P | Data Analysis and Design |
| H1 21413P | Visual Programming |
| H1 21414P | Human Computer Interface |
| H1 21416P | Introduction to Programming |
| H2 21421P | Website Management |
| H1 21434P | Software Engineering Techniques |
| H2 21423P | Object Oriented Programming |
| H1 21431P | Implementation Project (Software Eng) |
| H1 21434P | Object Oriented Development |
| H2 21438P | Advanced Project |
| H1 21439P | Multimedia and Internet Development |

**ELIGIBILITY**
2 Passes in A/L
Duration : 24 Months (Full time)

### Business Information Technology

| Unit code | Title |
|---|---|
| H121404P | Computer Platforms |
| H121405P | System Analysis |
| H121406P | Software Constructs and Tools |
| H121407P | Computing Solutions |
| H121431P | Business Information Technology Implementation Project |
| H221408P | Quality Management Principles |
| H221409P | Communication Technology |
| H221432P | Advanced Business Information Technology Project |
| H121411P | Networking |
| H121412P | Data Analysis and Database Design |
| H121413P | Visual Programming |
| H121414P | Human Computer Interface |
| H121415P | End User Support |
| H121419P | Database Management Systems |
| H121430P | Business Application Development |
| H120751P | Financial Systems and Auditing |
| H221441P | Management Science |

**ELIGIBILITY**
2 Passes in A/L
Duration : 24 Months (Full time)

www.edexcel.org.uk
**An Edexcel Approved Training Centre**
# 181, Navalar Road, Jaffna.
Tel:021 222 8060, 021 222 2201
Fax: 021 222 6933
E-mail: iis@sltnet.lk

IIS CITY CAMPUS

# டி.எஸ்.சேனாநாயக்கா கல்லூரியின் அதிபரும் பணியிலிருந்து நிறுத்தம்

கொழும்பு,ஏப்.22

முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்கா கல்லூரியிலும் ஊழல் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்து அப்பாடசாலை அதிபரும் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

அவரின் இடத்திற்கு அதிபராக கொழும்பு றோயல் கல்லூரியின் உப அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழலகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் சிபாரிசின் பேரிலேயே டி.எஸ்.சேனாநாயக்கா கல்லூரியின் அதிபர் அசோக சேனானி ஹேவகே பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர், கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்கள் இடைநிறுத்தப்படுள்ளனர்.

மேலும் இருநூறு பாடசாலைகளில் முதலாம் தர அனுமதி விடயத்தில் ஊழல்கள் இடம்பெற்றனவா என்பது குறித்து ஆணைக்குழு விசாரித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரூ.50 லஞ்சம் பெற்ற பொலீஸாருக்கு நான்கு ஆண்டுகள் சிறைவிதிப்பு

கொழும்பு,ஏப்.22

மாட்டிறைச்சி ஏற்றிவந்த லொறியின் சாரதியிடமிருந்து 50 ரூபாவை லஞ்சமாகப் பெற்றுள்ளாரென்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து, பேலியகொடை பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய மேலதிகப் பொலீஸ் படையைச் சேர்ந்த பொலீஸார் ஒருவருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கினார். அத்துடன், 500 ரூபா அபராதமும் விதித்தார்.

பேலியகொடை, ஒலியாமுல்லை வீதித் தடையில் வைத்து மாட்டிறைச்சி ஏற்றிவந்த லொறியிலிருந்த நபரிடம் தேநீர் செலவுக்கென 50 ரூபாவை மேற்படி பொலீஸ்காரர் லஞ்சமாகப் பெற்றார். அதனை அவதானித்த பேலியகொடை பொலீஸ் போக்குவரத்துப் பிரிவின் தலைமைப் பொலீஸ் அதிகாரி அவனக் கைது செய்தார்.

அவருக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் சுமத்தப்பட்ட இரு குற்றச்சாட்டுக்களை விசாரித்த கொழும்பு மேலதிக நீதிவான் அவை நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 500 ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார். (ஒ-206)

# தமிழீழ வரலாறும் சமூகக்கல்வியும் போட்டித் தேர்வில் பரிசுபெற்றோர்

கிளிநொச்சி,ஏப்.22

தமிழீழ கல்விக் கழகத்தால் கடந்த வருடம் நடத்தப்பட்ட 'தமிழீழ வரலாறும் சமூகக் கல்வியும்' போட்டித் தேர்வில் வெற்றிபெற்றோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

தரம் 6, 7, 8 மாணவர்களிடையே நடத்தப்பட்ட இந்தப் போட்டிக்கான பரிசளிப்பு அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வன்னிப் பெருநிலப் பரப்பு மட்டத்தில் வெறறியீட்டிய ஒன்பது மாணவர்களுக்கும் வழமை போல் தமிழீழ வைப்பகத்தால் ஐயாயிரம் ரூபா ரொக்கப் பரிசில் சிறுவர் தேட்டக் கணக்கு ஊடாக வழங்கப்படவிருக்கின்றது.

### தேசிய மட்டம்

**தரம் 6 -** ஜெயராசா ஜெயமாருதி (இராமநாதபுரம் ம.வி.), இரவிச்சந்திரன் லோகேஸ்வரன் (பாண்டியன்குளம் ம.வி.), தில்லைநாதன் றொபின்சன் (கிளிநொச்சி ம.வி.).

**தரம் 7 -** பாலேஸ்வரன் ஆரணன் (கலைமகள் வித்தி.), தீசனா கனகராசா (கற்சிலைமடு அ.த.க. பள்ளி), தீபனா யோகராசா (கற்சிலைமடு அ.த.க. பள்ளி).

**தரம் 8 -** சயந்தினி செல்வராசா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.), கௌசல்யா விஜயரட்ணம் (முல்லைத்தீவு ம.வி.), சூசைப்பு வோலடி சொய்சா (பெரிய பண்டிவிரிச்சான் ம.வி.).

### வலயம் மட்டம்

### துணுக்காய்

**தரம் 6 -** அஜித்தா அன்சலோ (அனிஞ்சியன்குளம் அ.த.க. பள்ளி), வைத்தியலிங்கம் கிருஸ்ணதாஸ் (அனிஞ்சியன்குளம் அதக.பள்ளி), லவனிதா சாந்தகுமார் (அனிஞ்சியன்குளம் அதக. பள்ளி), பிரசனா இராஜகுலசிங்கம் (அனிஞ்சியன்குளம் அ.த.க.பள்ளி)

**தரம் 7 -** இராஜேஸ்வரி வேலு (வவுனிக்குளம் அ.த.க.பள்ளி), அற்புதராஜா அற்புதரூபன் (கல்விளான் அ.த.க.பள்ளி), விநாயகமூர்த்தி அகிலன் (தண்டுவான் அ.த.க.பள்ளி)

**தரம் 8 -** கேதீஸ்வரி சாதாசிவம் (விநாயகபுரம் அ.த.க.பள்ளி), பெரியதம்பி பிரதீபன் (திருமுறிகண்டி இ.வி.பள்ளி), லிந்தா ஆனந்தராசா (கற்சிலைமடு ம.வி.) செல்வராசா சிந்துஜன் (கோட்டைகட்டிய குளம் அ.த.க.)

### கிளிநொச்சி

**தரம் 6 -** வைஷ்ணவி இரவீந்திரன் (புனித திரேசா பெண்கள் கல்லூரி), விஜயரதி தருமலிங்கம் (கிளிநொச்சி ம.வி.), முருகானந்தா (ரகுராம் (ஊற்றுப்புலம் அ.த.க.பள்ளி), தர்ஷினி இராஜேந்திரம் (கிளிநொச்சி ம.வி.)

**தரம் 7 -** அமிர்தலிங்கம் ஆருத்திரன் (கிளிநொச்சி ம.வி.), சந்திரசேகரம் தேவப்பிரியன் (கிளிநொச்சி ம.வி.), சிவக்குமார் கபில் (உருத்திரபுரம் ம.வி).

**தரம் 8 -** ரேணுகா அருள்தாஸ் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), தமிழேந்தி சண்முகரட்ணம் (திருவையாறு ம.வி.), சிவானந்தன் ரஞ்சீவ் (கிளிநொச்சி ம.வி.).

### வவுனியா வடக்கு

**தரம் 6 -** நிவேதா சிவகுரு (மதியாமடு விவேகானந்தா த.வி.), தனுசா தனராஜ் (சின்னடம்பன் பாரதி வித்தி), சஞ்சிகா குமாரசாமி (சின்னடம்பன் பாரதி வித்தி.)

### மடு

**தரம் 6 -** சக்திவேல் டிலன்ராஜ் (கருங்கண்டல் ம.வி.), துரைச்சாமி டிலோஜன் (விளாத்திக்குளம் அ.த.க.), மிதுஷா புஸ்பராசா (வெள்ளாங்குளம் அ.த.க.)

**தரம் 7 -** திவ்யா பீற்றர் (ஆண்டாங்குளம் ம.வி.).

**தரம் 8 -** மெலனி பிரியங்கா ஜெகநாதன் (பெரிய பண்டிவிரிச்சான் ம.வி.).

### முல்லைத்தீவு

**தரம் 6 -** கில்மியா அன்ரன் குரூஸ் (இரணைப்பாலை ம.வி.), அன்ரன் ஆனந்தகுமார் மிட்சன் (உடையார்கட்டு ம.வி.), சோபியா பேரின்பராசா (வற்றாப்பளை ம.வி.).

**தரம் 7 -** ஆதித்தன் நிதர்சன் (சிறிசுப்பிரமணியம் வித்தியாலயம்), யதுர்ஷி செல்லத்தம்பி (முள்ளியவளை த.வி.), சுமிதா இந்துநாதன் (முள்ளியவளை த.வி.).

**தரம் 8 -** சண்முகம் பவித்திரா (அம்பலவன் பொக்கணை ம.வி.), அன்ரன் ஜீவராஜ் மோகன்ராஜ் (முல்லைத்தீவு ம.வி.), நாகேந்திரம் சுகந்தன் (முல்லைத்தீவு ம.வி.).

### வடமராட்சி கிழக்கு

**தரம் 6 -** தர்சனா தங்கவேலு (உடுத்துறை ம.வி.), ஜெனனி கந்தசாமி (உடுத்துறை ம.வி.), தர்ஷிகா சாந்தகுமார் (மருதங்கேணி இ.த.க.ப.)

**தரம் 7 -** கனுசியா பாலசுந்தரம் (மருதங்கேணி இ.த.க.ப.) பவுன்ரீனா மோசேஜ் தாசிசியஸ் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வி), உதயதீபா உதயச்சந்திரன் (மருதங்கேணி இ.த.க.பா)

**தரம் 8 -** செல்வக்குமார் தினேஸ்குமார் (மருதங்கேணி இ.த.க.பா.).

(ஒ-202)

# லஞ்சக் குற்றச்சாட்டில் பொறியியலாளர் கைது!

ஒப்பந்த அடிப்படையில் வீதிகளை அமைக்கும் ஒப்பந்தகாரர் ஒருவரிடமிருந்து 60 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பிரதேச வீதி அமைப்புப் பொறியியலாளர் ஒருவர் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேற்படி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படவுள்ள நிதி அனுமதி தொடர்பாக அவரிடமிருந்து லஞ்சம் பெற்றார் என்று பொறியியலாளர் மீது லஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றஞ்சுமத்தியுள்ளது. (ஒ-206)

## சுனாமியின் பின்னர்

# உல்லாசப் பயணிகள் வருகை இருபது சதவீதத்தால் குறைவு

கொழும்பு,ஏப்.22

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் வருகை 20 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் இங்கு வந்துள்ளோரின் எண்ணிக்கை 74 ஆயிரத்து 800 ஆகும். கடந்த ஆண்டை விட இது 18 ஆயிரத்து 700 குறைவாகும்.

இதனிடையே உல்லாசப் பயணத்துறையின் வருமானமும் இக்கால கட்டத்தில் 18.9 வீதம குறைந்துள்ளது. அதற்கமைய கடந்த 2004ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் கிடைத்துள்ள 6502.2 மில்லியன் ரூபா வருமானம் இந்த ஆண்டின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 5273.3 மில்லியன் ரூபா வரையிலேயே கிடைத்துள்ளது. அது கடந்த ஆண்டை விட 1228.9 மில்லியன் ரூபாவால் குறைந்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் உல்லாசப் பயணிகளின் வருஷகையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதே இத்தகைய வீழ்ச்சிக்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

(ஒ-206)

## 20.04.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200235665 இலிருந்து 200248367 வரை

சீட்டிழுப்பு இல. 1599

**03 31 38 65** சுப்பர் எண் **09**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.23,88,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 23,88,950/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 26 | 5,000/- | 130,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 327 | 1,000/- | 3,27,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,123 | 500/- | 5,61,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 16,568 | 40/- | 6,62,720/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 15,807 | 20/- | 3,16,140/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,35,569 | 10/- | 23,55,690/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 58,53,050/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 30,18,350/-

தொடர் இல. 300216843 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 23 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

200241629-6-81
200247424-3-31
200239053-5-79
200243813-5-10
200246339-5-87

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# சிறுவன் கைது!

கொழும்பு,ஏப்.22

பங்களாதேஷ் நாட்டு மீன்பிடிப்படகு ஒன்றிலிருந்து கடலில் தள்ளிவிடப்பட்டவர் என்று கருதப்படும் 15 வயதுச் சிறுவன் கொழும்புத்துறைமுகக் கடற்பகுதியில் கடந்த 18 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் தொழில் பெற்றுத் தருவோம் என்று தெரிவித்து பங்களாதேஷ் மீனவர்கள் சிலர் தன்னை மீன்பிடிப் படகில் ஏற்றி வந்தனர் என்றும் - இடைநடுவில் அவர்கள் தன்னைக் கடலுக்குள் தள்ளிவிட்டனர் என்றும் - அச்சிறுவன் கடற்படையினரிடம் தெரிவித்துள்ளான்.

கைது செய்யப்பட்டுள்ள மேற்படி சிறுவன் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான. பொலீஸார் மேற்படி சிறுவன் பற்றி இலங்கையிலுள்ள பங்களாதேஷ் தூதரகத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

(ஒ-206)

UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை வழங்கி வருகின்றோம். கணனித் துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

3 வருட முழு உத்தரவாதம்

கொழும்பு விலையில்

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்

New Year Offer

நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

Inkjet Printer/2400 DPI Scanner/ Computer Table/600VA UPS

மற்றும் Screen Filter, Mouse pad & Dust Cover Totally Free

Hybrid Boost, Hyper Thread, Dual Monitor

புதிய Multimedia Pentium IV கணனிகள்

மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

An Indian Engineer's Centre

We are entirely different from others

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை 23.04.2005 (சனிக்கிழமை) உடன் முடிவடைகிறது.

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.

ஆத்மீக விடுதலையின் பெருவிழா

அசெம்பிளி ஓவ் கோட். மானிப்பாய்.

சித்திரை மாதம் 22, 23, 24ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் 1.30 மணிவரை உபவாச ஜெபமும், வேதப்படிப்பும் மாலை 3.00 மணிக்கு விடுதலையின் பெருவிழா

★ தீராத பிரச்சினையா? ★ போராட்டமா? ★ வியாதியா? ★ பில்லி சூனியக் கட்டுக்களா?

செய்தியாளர்: பாஸ்டர் குமார்

எல்லாவித பிரச்சினைகளில் இருந்தும் விடுதலைதருகிறார் இயேசு.

வாருங்கள் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்பு: பாஸ்டர் சாம் ராஜசூரிய T.P.: 222 3204 அல்லது 0777 238300, 222 2659

(44529)(33-46-14-18-11-34-30)

# காரைநகர் களபூமி பாலாவோடை — குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வசந்த மண்டப மஹாகும்பாபிஷேக விழாச் சிறப்புமலர்

## —22-04-2005—



**பார் மக்களின் பசி தீர்த்தவளே!**

குறிஞ்சையில் உதித்தவளே
தோணியில் வந்த வேளை
பாலாவோடையில் பதிந்தவளே
பார்மக்களின் பசி தீர்த்தவளே
பார்மக்களைப் பாதுகாத்தவளே
பாலாவோடையில் பகட்டுடன் பதிந்தவளே
உன் அழகு மாளிகையில் உன்னைக்காண
ஆயிரம் கண் வேண்டும் அம்மா!





**எம் நெஞ்சம் குளிர்ந்ததே அம்மா!**

அன்னையே உன் ஆடம்பரச்சிந்தனையை
உன் அடியவர் சிந்தனையில் பதித்து
உன் அழகு மாளிகையினை அமைத்தாய்!
அம்மா! அடியவர் எம் நெஞ்சம்
குளிர்ந்ததே அம்மா ! அன்னையே சரணம் !
தாயே சரணம்! தேவியே சரணம்!
பாதார விந்தம் பணிந்தோம் அம்மா !
பதமலர் எமக்கு நீ அருள்வாயே

**நாதஸ்வரம்**
M.B.பாலகிருஸ்ணன்.
M.பஞ்சாபிகேசன்
M.B.சேகர்
மறைந்த தவில் மேதை N.R.சின்னராஜா புதல்வன்
R.சுதாகரன் காரையம்பதி மறைந்த நாதஸ்வரமேதை
N.K.கணேசனின் புதல்வன் K.பவப்பிரியன் குழுவினர்.

**தவில்**
கலைமாமணி திருப்புங்கூர்
T.G.முத்துக்குமாரசாமி
திருச்சி
S.சிறீகாந்த்
இணுவில்
N.K.நித்தியானந்தன்

ஸ்ரீமத் தக்ஷண கைலாயம் என வழங்கப்பெறும் ஈழவளநாட்டின் வடபால் அமைந்த சைவமும், தமிழும் திகழ்ந்து தானமும், தருமமும் ஒருங்கே விளங்கும் புண்ணிய பூமியாகிய காரைநகரில் புராதன ஷேத்திரமாக நவசக்தி பீடங்களில் ஒன்றாகிய பாலாவோடைபதியில் வேம்பு,ஆல், அரசு முதலிய தேவவிருட்சங்கள் மத்தியில் தன்னை நாடிவரும் அடியார்களின் துயரினைப் போக்கி திருவருள் பொழிந்து கொண்டு விளங்கும் அன்னை முத்துமாரி அம்பாளின் வசந்த மண்டபத்திற்கு மங்களகரமான நிறை பார்த்திப வருஷம் சித்திரைத்திங்கள் 09 ஆம் நாள் (2005.04.22) வெள்ளிக்கிழமை பூர்வபட்ச திரயோதசி திதியும், அத்த நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 8.08 மணிமுதல் 9.19 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் வசந்த மண்டபத்திற்கும், யாகசாலைக்கும் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அதற்கும் முன்னரும் பின்னரும் நடைபெறும் கிரியைகளில் அடியார்கள் கலந்துகொண்டு அன்னையின் அருளைப்பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

### கிரியா கால விவரம்

**சித்திரைமாதம் 9 ஆம் நாள் (2005.04.22) வெள்ளிக்கிழமை**

காலை 6.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று 8.08 மணிமுதல் 9.19 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும். தொடந்து எஜமான் அபிஷேகம், குருமார் சம்பாவனை, ஆசியுரை, அம்பாளுக்கு விஷேட பூசை வழிபாடு, திருவருட்வபிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும். மாலை 6.00 மணிக்கு சாயரட்சை பூசை, 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையினைத்தொடர்ந்து அம்பாள் திருவீதியுலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அலங்காரக்காட்சியும் இடம்பெறும்.

**விழாச்சிறப்புற வாழ்த்துவோர்:**


**ஞானமலர்ஸ் ஸ்ரோர்ஸ்**
ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு.

**மகாராணி பட்டுச்சோலை**
50, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

**E.S. பேரம்பலம் அன் சன்ஸ்**
54,52, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**S.V.M.முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
T.P.222 2991

(C/42437)

**MANOJ AIR TOURS Pvt(Ltd)**
**MANOJ Express.**
Colombo 2390128, Jaffna 222-3916, 222-7916, wellawatha 4527318
Hot line : 07771517019, E.mail-manojtours@yahoo.com

# இணுவில் இந்து,மயிலணி வளர்பிறை கபடிச் சம்பியன்களாகத் தெரிவாகின

வலி.வடக்கு,ஏப்.22

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகமும் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இறுதிப் போட்டிகள் இணுவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் விறுவிறுப்பாக விளையாடி 15 புள்ளிகளைப் பெற காளியம்பாள் விளையாட்டுக்கழகம் 10 புள்ளிகளைப் பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 16 புள்ளிகளைப் பெற்றபோதிலும் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் 12 புள்ளிகளை மட்டும் பெற்றது.

ஆட்ட முடிவில் 27 : 26 புள்ளிகள் என்ற கணக்கில் தாவடி காளியம்மாள் விளையாட்டுக் கழகத்தை இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டத்தில் முழுநேரத்திலும் வளர்பிறை விளையாட்டுக் கழகம் முன்னணியில் நின்றது. முதல் பாதி ஆட்டம் 18 : 11 என்ற புள்ளி நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் 24:10 புள்ளிகள் என்ற நிலையில் முடிவடைந்தது.

ஆட்ட முடிவில் வளர்பிறை விளையாட்டுக் கழகம் 42:21 என்ற புள்ளிகளினால் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (3-86)

## பெண்களுக்கான உதைபந்தாட்டம்

யாழ். பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் குருநகர் தொடர்மாடி விளையாட்டுக் கழகமும் குருநகர் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (3-190)

## பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாபெரும் போர்த்தேங்காய்ப் போட்டியும் பாரம்பரிய விளையாட்டுக்களும் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவடி ஞானவைரவ ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளன.

தேங்காய் உடைத்தல், கயிறிழுத்தல், தயிர் முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரைப் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன. (ஐ-28-204)

# வதிரி பொம்மேர்ஸ் அணியே தடகளப் போட்டியில் வென்றது

கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடதப்பட்ட தடகளப் போட்டிகளில் வதிரி பொம்மேர்ஸ் வி.க. கூடுதல் புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது.

அனைத்துப் போட்டிகளிலும் 41 புள்ளிகளைப் பெற்று பொம்மேர்ஸ் அணி முதலிடத்தைப் பெற்றது. 33 புள்ளிகளைப் பெற்று மனோகரா அணி இரண்டாம் இடத்தைப்பெற்றது.

இந்தப் போட்டி முடிவுகள் தொடர்பாக நேற்று முன்தினம் விளையாட்டுப் பகுதியில் வெளியான செய்தியில் மனோகரா விளையாட்டுக் கழகம் முதலிடம் பெற்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறாகும். இதனால் சம்பந்தப்பட்டோருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தாக்கங்களுக்கு வருந்துகின்றோம். (ஐ-3)

# விளையாட்டு


# பல்கலை.-பற்றீஸியன்ஸ் அணிகள் இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடக்கும் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் பற்றீஸியன்ஸ் அணியும் மோதுகின்றன.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்துக்குப் பிரதம விருந்தினராக விஞ்ஞானபீட விலங்கியல்துறை விரிவுரையாளர் எஸ்.நோயல் சுரேந்திரன் கலந்து கொள்கின்றார். இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழகம், யங்ஸ்ரார், பற்றீஸியன்ஸ், சென்ரலைட்ஸ் ஆகியன பங்குபற்றியிருந்தன.(3-190)



அண்மையில் சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இல்லத் தலைமை மாணவன் செல்வன் இ.றஜிந்தனுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் வெற்றிக் கேடயம் வழங்கினார். அருகில் அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன், ஆசிரியை செல்வி ந.பிறேமா, ஜி.சாந்தினி, ரா.ஜெயராணி, கிரிதரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.
(படம்: தொல்புரம் நிருபர்)

## ஜெயரட்ணசிங்கம் நினைவுக் கிரிக்கெட்:

# இரு விக்கெட்டுக்களால் ஸ்ரான்லி அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடததும் வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது கால் இறுதி ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி இரண்டு விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார் அணியினர் 50 ஓவர்களில 8 விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் யது 43 ஓட்டங்களையும், லக்சுமிகாந்த 23 ஓட்டங்களையும், கிருஸ்ணராஜா 20 ஓட்டங்களையும், உமாகரன் ஆட்டம் இழக்காமல் 36 ஓட்டங்களையும், ஜெயரூபன் ஆட்டம் இழக்காமல் 36 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக வீரர் குணதாஸ் 27 ஓட்டங்களைக் கொடுதது 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

215 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியினர் 40.3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கந்தன் 72 ஓட்டங்களையும், றொசான் 46 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

காந்தன் பெற்ற 72 ஓட்டங்கள் இச்சுற்றுப் போட்டியின் 13ஆவது அரைச்சதம் ஆகும்.

இப்போட்டிக்கு எஸ்.சதாகரன், எம்.ஆர்.மோகனதாஸ் ஆகியோர் கடமையாற்றினர். (3-190)

## யாழ்.பிரதேச செயலக உதைபந்தாட்டம்

# பாடும்மீன் வி.க. வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜெட்லைனஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட நேரத்தில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோலினைப் பெற்றதினால் (2:2) ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதில் ஜெட்லைன்ஸ் வீரர்களான என்கிருபா, ரி.பிரபா ஆகியோர் தமது அணிக்கான கோலினையும் பாடும்மீன் விளையாட்டுக் கழக வீரர்களான எ.கபிலஸ், இ.சுரேஸ் ஆகியோர் தமது அணிக்கான கோலினையும்பெற்றுக் கொடுத்தனர்.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கத் தலா ஐந்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் நான்கு உதைகள் மட்டும் கோல் ஆக்கி இரு அணிகளும் மீண்டும் சமநிலையைப் பெற்றுக்கொண்டன.

6ஆவது உதையினை இரு அணியினரும் கோல் அடித்தால் 7ஆவது உதை வழங்கப்படடது.

இதில் பாடும்மீன் விளையாட்டுக் கழக வீரர் கோல் ஆக்கிய போதிலும் ஜெட்லைனஸ் வி.க.வீரர் வெளியே அடித்தமையால் பாடும்மீன விளையாட்டுக் கழக அணி 7:6 என்ற கோல் கணக்கில் ஜெட்லைன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது. (3-190)

## மெய்வன்மைச் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் எஸ்.மரியதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (3-202)

## கரம் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். வை.எம்.சி.ஏ. வருடா வருடம் அங்கத்தவர்களுக்கு இடையில் நடத்திவரும் உள்ளக விளையாட்டுப் போட்டியின் கரம் போட்டி இன்று காலை 9 மணியளவில் வை.எம்.சி.ஏ. மண்படத்தில் ஆரம்பமாகின்றது. (3-190)

# கோப்பாய் கல்விக் கோட்டத்தின் மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

கோப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் மெய்வன்மைப் போட்டிகள் இடம்பெற்றன.

இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 11,13, 15,17 வயதுப் பிரிவினர்களின் முடிவுகள் நேற்றைய உதயனில் வெளியாகின.

19,21 வயதுப் பிரிவுகளுக்கான முடிவுகள் வருமாறு:-

### 19 வயதுப் பிரிவு

**100 மீற்றர்** - ர.கோமரோ (உரும்பிராய் இந்துக் கல்லூரி), எஸ்.சுரேஸ் (வாதரவத்தை விக்கினேஸ்வரா), வி.யனுஸ்காந் (இடைக்காடு மகாவித்தியாலயம்).

**200 மீற்றர்** - கே.சபேசன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), வி.தமிழ்ச்செல்வன் (அத்தியார் இந்துக் கல்லூரி), மயூரன் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

**400 மீற்றர்** - வி.மதீசன் (அத்தியார் இந்துக் கல்லூரி), கே.சபேசன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி), எஸ்.அனிஸ்ரன்றெபேட் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

**800 மீற்றர்** - ரீ.நகுலேஸ்வரன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), எஸ்.கோகிலகிருஸ்ணன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), எஸ்.அன்ரன் றெபேட் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

**1500 மீற்றர்** - ரீ.நகுலேஸ்வரன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), வி.ஜெனடித்மென்டிஸ் (அச்சுவேலி மத்திய கல்லூரி), எம்.மயூரன் (கோப்பாய் மகாவித்தியாலயம்).

**நீளம் பாய்தல்** - ரீ.லட்சியசீலன் (அத்தியார் இந்துக் கல்லூரி), எஸ்கோகிலகிருஸ்ணன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), வை.தினேஸ் (உரும பிராய் இந்துக் கல்லூரி).

**உயரம் பாய்தல்** -இ.லட்சியசீலன் (அத்தியார் இந்துக் கல்லூரி), கே.சபேசன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), வீ.தனுஸ்காந்த் (இடைக்காடு மகாவித்தியாலயம்).

**முப்பாய்ச்சல்** - எஸ்.கோகிலகிருஸ்ணன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), கே.ஜோன் மயூரன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஆர். அஜந்தன் (இடைக்காடு மகாவித்தியாலயம்).

**குண்டு எறிதல்** - ரி.கொமரோ (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஆர்.பிரகாந்தன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), ரி.பிரசாந்தன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி).

**தட்டெறிதல்** - ஆர்.பிரகாந்தன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), எஸ்.சுரேஸ் (வாதரவத்தை விக்கினேஸ்வரா), ரி.கொமரோ (உரும்பிராய் இந்துக் கல்லூரி).

**ஈட்டி எறிதல்** - ஆர்.பிரகாந்தன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), ஜெ.சஞ்சீவன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), எஸ்கன்சியஸ் (கோபபாய் கிறிஸ்தவக் கல்லூரி).

### 21 வயதுப் பிரிவு

**100 மீற்றர்** - எஸ்.சிவசொரூபன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), பி.சந்திரபிரதாப் (அத்தியார் இந்துக் கல்லூரி).

**200 மீற்றர்** - எஸ்.சிவசொரூபன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), ரீ.கணேஸ்வரன் (அத்தியார் இந்துக் கல்லூரி), வி.சந்திரப்பிரகாஸ் (அத்தியார் இந்துக் கல்லூரி).

**400 மீற்றர்** - ஆர்.ரஜீபன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி).

**800 மீற்றர்** - ஆர்.கௌதமன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), எம்.ரூபன் (அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), பி.சந்திரப்பிரகாஸ் (அத்தியார் இந்துக் கல்லூரி).

**1500 மீற்றர்** - எம்.ரூபன் (அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்), ரீ.கணேஸ்வரன் (அத்தியார் இந்துக் கல்லூரி), ஆர்.ரதீபன் (புத்தூர் ஸ்ரீ சோஸ்கந்தக் கல்லூரி).

**நீளம் பாய்தல்** - ஆர்.வசந்தன் (அத்தியார் இந்துக் கல்லூரி), சிறி.பூங்குன்றன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), தபிரசாந்தன் (புததூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி).

**முப்பாய்ச்சல்** - பி.ராஜ்வினோத் (அத்தியார் இந்துக் கல்லூரி), எஸ்.சிவநக்சன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி).

**உயரம் பாய்தல்** - சிறி.பூங்குன்றன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), க.சிறிசங்கர் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி).

**குண்டு எறிதல்** - க.மோகனதாஸ் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), த.மோகன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி).

**தட்டு எறிதல்** - க.மோகனதாஸ் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி) எஸ்ரஜீவன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), எஸ்.நீவநீதன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

**ஈட்டி எறிதல்** - என்.பிரதாஸ் (அத்தியார் இந்துக் கல்லூரி), இ.உமாரதன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), அ.தேவானந்தா (அத்தியார் இந்துக் கல்லூரி).

**4X100 மீற்றர்** - அத்தியார் இந்துக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரி.

**4X400 மீற்றர்** - அத்தியார் இந்துக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. (3-190)

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
### பழைய மாணவர்கள் சங்க
### வருடாந்தப் பொதுக்கூட்டம்
### ஒத்திவைக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் 24.04.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறு மென ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு எதிர்வரும் 08.05.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை அனைத்து உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தலைவர் செயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

(C/42420) (32-21-14-15)

## வில்லூன்றிப் புனித தீர்த்தம்
## சித்திரா பூரணைப் பெருவிழா

***24.04.2005 ஞாயிற்றுக்கிழமை***

**தீர்த்தோற்சவம்**

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8.00 மணி தீர்த்தவாரி
காலை 9.30 மணி வரை தீர்த்தக்கட்டத்தில் அனுக்கிரகம்
காலை 9.30 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

**பிதிர்க் கடன்கள்**

காலை 8.15 மணிக்குத் தீர்த்தவாரி முழுந்தவுடன் அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணாங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை,
வில்லூன்றி தேவஸ்தானம்,
பரிபாலனசபை, வில்லூன்றிப் புனித தீர்த்தம்

(44474)
(32-21-14-15)

## யாழ்ப்பாணக்கல்லூரி
## தொழில்நுட்ப நிறுவனம்
### வட்டுக்கோட்டை

உலோக வார்ப்பு தொழில்பயிற்சி (காலம் 6 மாதங்கள்)
(அலுமினியம், பித்தளை, சினச்சட்டி (Cast -Iron)
(Six months Certificate Course in Foundry Practice)

6 மாத காலத்தில் சுய தொழிலில் ஈடுபட விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் ஆண்டு 10 வரை படித்த மாணவர்களுக்குக் கற்கும் பயிற்சி நெறி

உற்பத்தி செய்யும் பொருள்கள்

- நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
  பம்ப் கேசிங், இம்ப்பளர், டிஸ்டன் பீஸ், என்சீல்ட், கூலிங், வேன் (Cooling Fan) வேன் கவர் (Fan Cover)
- சமையல் பாத்திரங்கள்
  தாச்சி, தோசைக்கல் போன்றவை

குறிப்பு: ஒழுங்கான பயிலுநருக்கு நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரூபா 50/- வழங்கப்படும்

செய்முறையில் கூடிய புள்ளிகள் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொழில்பயிற்சி 27th April 2005 இல் ஆரம்பிக்கப்படும்.
விபரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**DIRECTOR**
(சி-42389)
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY,**
(21-14-15) **Vaddukoddai.**
E.Mail: Jcit@sltnet.lk Tel.No: 0602213139

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 14 . 08 . 1952
விண்ணில் 17 . 04 . 2004

திருமதி
**விஜயலெட்சுமி தங்கராஜா**
தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்திய சாலை

திதி : திரயோதசி

ஆண்டு ஒன்று சென்றுவிட்டதம்மா – நீ
எங்களை விட்டுப்பிரிந்து சென்று !
ஆனால் –
அரவணைத்து, அனுசரித்துப்போகும்
உன் அன்பான குணத்தினால்
எம்மைவிட்டுப்பிரியாமல்
எங்கள் உள்ளத்தில் தான் நீ வாழ்கின்றாய் !

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

320/1,ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம். (44463)(51-14-15)

# சமய ஒழுக்க நெறிப்பாடம் மாணவருக்கு அவசியம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் பிரத்தியேக வகுப்புகளை நீக்கி அந்த நேரத்தை சமய ஒழுக்கநெறிப் பாடத்துக்காக ஒதுக்கு மாறு இளவாலை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாகக் கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக கப்பட்டுள்ளதாவது:-

எமது மாணவர் சமுதாயத்திலே அற நெறிகள், ஒழுக்க நெறிகள் குன்றி வருகின்றன. அவர்களிடம ஆன்மீக சிந்தனைகள் அற்றுப்போயுள்ளன. பாடசாலைகளில சமய பாடத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை. நாட்டில் நடைபெறும் அசம்பாவிதங்களுக்கு இதனால் மாணவரும் காரணமாகின்றனர்.

எனவே, மாணவர்களின் ஓய்வு நாளைக கருத்தில் கொண்டும் சமயக் கல்வியின் முக்கியத்துவத்தை அனைத்து மக்களும் விரும்புகின்றபடியாலும் அமைச்சரவையில் தீர்மானித்துள்ளபடி தயவு செய்து ஞாயிற்றுக் கிழமைகளில் அற நெறிகளையும் சமயக் கல்வியையும் கற்பிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(ஒ-202)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.22

கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்.பல்கலைக் கழக வணிக மாணவர் மன்றமும் இணைந்து நடத்தும் 2005 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வணிகக் கல்விப் பாடத்திற்கான கருத்துரைகளை யாழ் பலகலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசாவும், யாழ். பல்கலைக் கழக முகாமைக் கற்கைகள் வணிக பீட சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ரட்ணமும் நிகழ்த்தவுள்ளனர்.

கணக்கியல் பாடத்திற்கான கருத்துரைகளை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஆர்.யோகேந்திரராஜாவும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். பாலபுத்திரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த வழிகாட்டல் கருத்தரங்கில் மாணவர்களைக் கலந்துகொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ஒ-202)

## வீடமைப்புக் கூலி

சாவகச்சேரி,ஏப்.22

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் பொது மக்களுக்கான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வீடமைத்துக் கொடுக கப்பட்ட பயனாளிகள் 175 பேருக்கு வீடமைப்புக் கூலிக் கொடுப்பனவாக தலா 22,050 ரூபா பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப் பட்டது.

(ஒ-31)

## நீங்காத நினைவலைகளும் நன்றி நவிலலும்

31 ஆம் நாள் — 17ஆம் வருடம்



அமரர்
**மயிலன் பாலன்**



திருமதி
**பூரணம் பாலன்**

31 - 07 - 1938 ← தோற்றம் → 19 - 07 - 1946
23 - 03 - 2005 ← மறைவு → 27 - 05 - 1988

அமரர் மயிலன் பாலன் அவர்கள் சுகவீனமுற்று வைத்தியசாலையிலும் தனது இல்லத்திலும் வாழ்ந்த இறுதிக்காலத்திலும் பின்னர் அவரது மரணச் செய்தி அறிந்தும் பல வழிகளில் ஆறுதலும் ஒத்தாசையும் அழித்தும் இறுதிச்சடங்கிலும் கலந்துகொண்ட உள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் -

இன்று (22.04.2005) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை. (44486)(21-14-15)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 08.04.1930
மறைவு 23.03.2005

அமரர்
**சிவசுப்பிரமணியம் செல்வலட்சுமி**

என் அன்புச் சின்னம்மா
பாசமாய்ப் பார்த்தேன் அம்மா!
சொல்லாமல் மறைந்தாய் அம்மா!
இனி நான் உங்களை எங்கே
காண்பேன் அம்மா?
சொந்தம் எங்கே?
பந்தம் எங்கே?
பாசம் எங்கே?
கருணை எங்கே?
அன்பு எங்கே?
பேரும் புகழும் பனத்திற்குத்தான்
அம்மா!

23.03.2005 அன்று காலமான எமது குடும்பத் தலைவி அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் இன்று (22.04.2005) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்படிலேன்.
கொக்குவில்.

(44451)(51-14-14)

என்றும் உங்கள் நினைவுள்ள
அன்பு மகள் ஆ. சரோஜினிதேவி



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம் கடந்த ஆண்டு நடத்திய தையல், மனையியல் பயிற்சி நிலையத்தின் கண்காட்சி அண்மையில் புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈழமாறன் உரைநிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தலைமைப்பீட உதவி அரச அதிபர் க.வீரகத்திப்பிள்ளை, உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தியாகமூர்த்தி, கடற்புலிகள் அமைப்பைச் சேர்ந்த அருணன் மற்றும் விருந்தினர்களைப் படத்தில் காணலாம்.

# கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்புச் சம்பவம்: சப்இன்ஸ்பெக்டர் - பாதாள நபர் தொடர்பா?

கொள்ளுப்பிட்டியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பொலஸ் சப்இன்ஸ்பெக்டருக்கும் போதைப் பொருள் கடத்தல் நபருக்கும் இடையில் தொடர்புகள் இருக்கின்றனவா என்பது குறித்து குற்றப்புலனாய்வுப் பொலஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ரேணுகா சிற்றி ஹோட்டலின் அருகில் நேற்றுமுன்தினமிரவு இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இதில் மூவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் சப்இன்ஸ்பெக்டர். மற்றொருவர் பாதாள உலகின் பிரபல புள்ளியான குடுலால் என்பவர்.

இவர்கள் மூவரும் ஹோட்டலில் உணவருந்தப் போயிருந்த சமயத் தில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது என்று பொலீஸார் சந்தே கிக்கின்றனர். இதனால், குறிப்பிட்ட சப்இன்ஸ்பெக்டருக்கும் பாதாள உலக நபருக்கும் இடையிலான தொடர்புகள் என்ன என்பது பற்றியே குற்றப்புலனாய்வுப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேநேரத்தில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதன் பின்னணி குறித்தும் பொலீஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். (எ-த)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 18 - 12 - 1925



மறைவு 24 - 03 - 2005

அமரர் **நாகலிங்கம் கனகராஜா**

(ஓய்வுபெற்ற. அரச உத்தியோகத்தரும், காணி அபிவிருத்தித் திணைக்களம், கொக்குவில் கிராமசபை முன்னாள் உறுப்பினரும்)

அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (22.04.2005) வெள்ளிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்-

*பொன்னையா லேன்,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (44540)(29-17-16)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

23 - 04 - 1978



22 - 04 - 2000

**கனகரத்தினம் கனகரூபன்**
**(மேஜர் பிருந்தன்)**

தணியாது போராடும் தலைவன் பாதையில்
தமிழீழம் நோக்கிய தளராத நடையில்
வரலாறு ஆனாய் ஆண்டுகள் ஐந்தென்ன
என்றுமே அழியாது உன் நினைவுகள்!

*மருதடி வீதி,*
*சாவகச்சேரி வடக்கு.* (சி-42455)(29-17-16) குடும்பத்தினர்.

## தாதி தேவை

எமது வைத்திய நிலையத்திற்குப் பெண் தாதி தேவை.
(பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)
தொடர்புகளுக்கு:
முருகானந்தா வைத்திய நிலையம்
மாம்பழம் சந்தி, அரியாலை.
T.P. No.: 077 6284687
(44543)(29-17)

## தேவை

நாவலர் வீதியில் அல்லது கைலாசப்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் வீடு அல்லது கடை அல்லது அறை வாடகைக்கு உடன் தேவை.
தொடர்பு:
குமரன்
T.P. : 0779080484
(சி-42442)(29-17)

## Spoken English With Grammar

By- N.சண் (Dip. in. Eng.)
சனி - ஞாயிறு 9 a.m.
O/L கணிதம் Paper Class
திரு.அற்புதராஜா
சனி, ஞாயிறு - 8 a.m.
பட்டதாரி பயிலுநர் வகுப்புகள்
சனி, ஞாயிறு 10 - 12 மணி
புதிய பிரிவுகள் ஆரம்பம் 23.05.2005 சனி
உயர் கற்கைகள் பட்டப்படிப்புக் கல்லூரி,
342, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ஆரியகுளம் சந்தி அருகில்.
(44535)(29-17)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
**உடற்கல்வி டிப்ளோமா**
**கற்கைநெறி -2004/2005**

மேற்படி கற்கை நெறிக்குத் தெரிவுசெய்யப் பட்ட புதிய மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுக் கல்விச் செயற்பாடுகள் 02.05.2005 இல் ஆரம்பமாகும். - துணைவேந்தர்
21.04.2005 (சி-42451)(29-17-16)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரசடி வீதியில் இரு வீடுகள் கட்டக்கூடிய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 011 2559364 அல்லது
டாக்டர் க.செந்தில்குமரன்,
74, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (44516)(29-17-16)
















# கற்பிட்டியில் இன்று ஆர்ப்பாட்டம்

நுரைச்சோலை அனல் மின்நிலையத் திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நண்பகல் கற்பிட்டிப் பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன.

பாலாவியிலிருந்து கற்பிட்டி வரையுள்ள பிரதேசங்களில் அமைந் துள்ள பள்ளிவாசல்களில் இன்று மதியம் ஜும் ஆத் தொழுகையை அடுத்து இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருக்கின்றது. (எ-க)

# வல்லை அனந்தராஜின் நூல்கள் நாளை லண்டனில் அறிமுகம்

வல்லை ந.அனந்தராஜ் எழுதிய 12 நூல்களின் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை லண்டன் நேரப்படி பிற்பகல் 5.31 மணிக்கு லண்டன் ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலய சிவயோகம் மண்டபத்தில நடைபெறவுள்ளது.

அன்னபூரணியின் அமெரிக்கப் பயணம், வல்வைப் படுகொலை, அறிவியல் உண்மைகள், உதிரம் உறைந்த மண், முகாமைத்துவ நுட் பங்கள், சந்நிதிச் செல்வம், வடபுல நாட்டார் வழக்கு, நீரலை (நாவல்), ஈழத்துத் தமிழிலக்கியத்தில் அறிவியல் நூல்கள், பாதரசம், தேசி யத்தை நோக்கிய கல்வி, கூழ் நியாயம் ஆகிய 12 நூல்களின் அறி முகவிழாவே லண்டனில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி, தமிழறிஞர் செ.சிறீஸ்கந்தராஜாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அறிமுகவிழாவில் வாழ்த்துரையைப் புதினம் பத் திரிகையின் பிரதம ஆசிரியர் ஈ.கே.ராஜகோபாலும் வெளியீட்டுரையைப் பிரபல நாவல் எழுத்தாளர் கி.செ.துரையும் (டென்மார்க்) நிகழ்த்துவர்.

மதிப்பீட்டுரைகளை டாக்டர் எம்.எஸ்.மூர்த்தி (வெண்புறா), எஸ்.மகா லிங்கசிவம் (மாலி), திருமதி மாதவி சிவலீலன், பேராசிரியர் மு.நித்தி யானந்தன், இரவி அருணாச்சலம் ஆகியோர் நிகழ்த்துவர்.

ஒரு எழுத்தாளரின் 12 நூல்கள் ஒரே தடவையில் அறிமுகம் செய்து வைக்கும் விழா லண்டனில் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-202)

## அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய சித்திரைப் பௌர்ணமி பெருவிழா

காலம்:- 24.04.2005

முல்லைமாவட்டம் - கருணாவற்பற்று தெற்குப் பகுதியில் மாங்குளம் பிரதேசத்தில் அம்பகாமம் கிராமத்தில் எழுந்தருளி, அடியவர்களின் துயர் தீர்த்தருள்புரியும் புதுமைமிகு ஸ்ரீ மம்மில் பிள்ளையார் வருடாந்தப் பெருவிழா காண்கின்றார். அன்றைய தினம் காலை விஷேட அபிஷேகமும் ஆராதனைகளும் இடம் பெற்று, பிற்பகல் 2.30 மணிக்கு விஷேட பூசை இடம்பெறும் இரவு அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்பரத்தில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

குறிப்பு:- ★அடியார்களின் நன்மைகருதி மாங்குளத்திலிருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
★ அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்படும்.
அனைவரும் வருக! அருள்பெற்று உய்க!
பரிபாலன சபையினர் (44539)(35-17-29)
ஸ்ரீ மம்மில் பிள்ளையார் தேவஸ்தானம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமையாற்றும்
கணபதிப்பிள்ளை புஸ்பராசா அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **நாகம்மா கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் ஆறாத் துயருற்றிருக்கும் அவர்களின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன் னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உதவிப் பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும்
(44542)(29-17-16) கடற்றொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### தாமன் சங்கரன் (சதாசிவம்)

(தச்சுத்தொழில் அதிபர்)

கரணவாய், அண்ணாசிலையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தாமன் சங்கரன் (சதாசிவம்) அவர்கள் நேற்று (21.04.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தேவியின் அன்புக் கணவரும் சுதாகரன் (சுவிஸ்), கரு ணாகரன் (சுவிஸ்), கலைவாணி, சுபாநந்தினி, கிருபாகரன் (வலயக் கல்வித் திணைக்களம், வடமராட்சி), வினோதா ஆகியோரின் அன் புத் தந்தையும் ரதி (சுவிஸ்), விஜிதா, ஞானேஸ்வரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அண்ணாசிலையடி,* தகவல்:
*கரணவாய்.* (சி-42459)(29-17-16) குடும்பத்தினர்.

### திருமதி செல்லமுத்து அன்னம்மா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தோப்பு, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து அன்னம்மா 19.04.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்பு மனைவியும் இராஜலட்சுமி (நெசவு உதவி முகாமையாளர், பிரதேச செயலகம், கோப் பாய்), புவனேஸ்வரி (நெசவு போதனாசிரியை, பிரதேச செயலகம், கர வெட்டி), தனலட்சுமி (கனடா), யோகேஸ்வரி, (ஆசிரியை, அச்சு வேலி மத்திய கல்லூரி), தவராஜா (கனடா), காலஞ்சென்ற ரட்ணராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சுந்தரலிங் கம் மற்றும் கதிர்காமநாதன் (கனடா), சின்னத்துரை (கனடா), வசு மதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தயன் (கனடா), கஜி தன், சுஜீவன், நிரோஜன், நிரஞ்சன், நிருபன், பிரியங்கா (கனடா), தர் சிகா (கனடா), சோபிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தோப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

*இராச வீதி,* செ.தவராஜா (மகன்).
*தோப்பு, அச்சுவேலி.* (சி-42458)(17-29-16)

## பொதுக்கட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டப் பேரணி வேலணையில் நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை 11 மணியளவில் வேலணை துறையூர் கடற்றொழிலாளர் சமாச அலுவலகம் முன்பாக ஒன்று திரண்ட மக்கள் அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர். வேலணைப் பிரதான வீதியூடாக நகர்த்த இந்தப் பேரணி இறுதியில் வேலணைப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. பின்னர் அங்கு வைத்து ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம், கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோருக்கான மகஜர்களை தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகத்தின் தலைவர் என்.தனேந்திரன், தீவகப்பொது அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் த.சத்தியநாதன் ஆகியோர் வேலணை உதவிப் பிரதேச செயலர் எஸ்.நந்தகோபாலனிடம் கையளித்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கி.சிவநேசன், மா.க.ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் ஆர்ப்பாட்டப்பேரணியில் கலந்து கொண்டனர்.

சண்டிலிப்பாயில்

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக்கோரியும் மற்றும் முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்று வலி.தென்மேற்கில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் சங்கானை சண்டிலிப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பெண்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் பொது நிறுவனங்களின் உறுப்பினர்களும்கலந்துகொண்டனர்.

சுலோக அட்டைகளும் இப்பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன நண்பகல் 11 மணியளவில் சண்டிலிப்பாயிலுள்ள வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தை ஆர்ப்பாட்ட பேரணி வந்தடைந்ததையடுத்து. அங்கு நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் பொது அமைப்புகளின் சார்பில் பிரநிதிகள் உரை நிகழ்த்தினர். அதனையடுத்து, ஜனாதிபதிக்கு முகவரியிட்ட மகஜர்கள் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மாவிடம்கையளிக்கப் பட்டன. (எ-8-7-86-135)

## அரசு கவிழலாம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடலாம். ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதத்தேர்தல் ஒன்றையும் நடத்தலாம். ஆனால், இது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

உறுதியானநிர்வாகம்ஒன்றுஅமையவேண்டுமானால் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். இதைத்தவிர சந்திரிகா அம்மையாருக்கு வேறுமார்க்கம் இல்லை.

ஜனாதிபதியும் அவரது கூட்டாளிகளும் அரசமைப்பையே கேலிக்கூத்தாக்க முனைகின்றனர்.

நாட்டை அச்சுறுத்தி கொண்டிருக்கும் நிர்வாக சீர்கேட்டிலிருந்து அதனைக் காப்பாற்றுவதற்கு ஒரேவழி இந்த ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதேயாகும். ஜனாதிபதி இந்த விடயத்தில் வேறு குறுக்கு வழிகளைக் கையாள முயன்றால் ஐ.தே.க. தனது முழுப் பலத்தையும் திரட்டி ஜனாதிபதியின் திட்டங்களை முறியடிக்கும் என்று - பேராசிரியர் பீரிஸ், கூறி னார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவும் கலந்துகொண்டார். (எ-க)

LOGIC
A/L 2007
Sat. Sun. 4 pm
By: P.கமல்
SHAMROCK
ஈச்சமோட்டை.
(445261)

அந்திவானம் நெருங்குகிறது
UNIT
விபரம் 13ம் பக்கம் பார்க்கவும்

மாபெரும் விசேட கருத்தரங்கு
★ கலை, வர்த்தக, விஞ்ஞான A/L 2005 மாணவர்க்கான
★ பொதுச் சாதாரணப் பரீட்சை (C.G.T)
★ 'மே' முதல் வாரத்தில்
★ இலவச வழிகாட்டி நூல்
★ இலவசக் கையேடு வழங்கப்படும்.
★ இடம் - BRIGHTMAN - நாவலர் வீதி
By: உமாசங்கர் & கமல்தாசன்
★ இன்றிலிருந்து பதிவு மேற்கொள்ளப்படும்.
(44527)(29-34-17)

## இறுதித் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்புக்கு) அவர்கள் முழுமையான எதிர்ப்பையே தெரிவிக்கின்றனர்; ஏன் எதிர்க்கின்றேன் என்று கூறி ஆனந்தசங்கரி எனக்கு கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தை நீங்கள் பார்த்தீர்களா? அது இதோ (கடிதத்தை காண்பிக்கிறார்). மிகவும் முக்கியமான கடிதம் இது. பொதுக்கட்டமைப்பைத் தாம் ஏன் எதிர்க்கின்றார் என்பதை இதில் விளக்கியிருக்கிறார் அவர்.

★ கே:- இந்த பொதுக்கட்டமைப்பிற்கு அரசினுள் மட்டுமல்ல, வெளியிலும் பரவலாக எதிர்ப் புக் கிளம்பியிருப்பதாக கூறுகின்றீர்கள். அப்படியானால் இதனை ஏற்படுத்த அரசு முயல்வதேன்? எப்படியாவது இந்தக் கட்டமைப்பை தமது அரசு உருவாக்குமென்று ஜனாதிபதியும் கூறுகின்றாரே?

✪ ரட்ணசிறி:- அரசியலில் இப்படிப் பல்வேறு வகையான பட்டங்களைப் பறக்கவிடுவது சாதாரண விடயம். இவையெல்லாம் வெறும் பட்டங்கள். ஒவ்வொரு விதமான அபிப்பிராயங்களையும் நாம் விடுகின்றோம். இந்த அபிப்பிராயங்கள் சுழன்று வரவேண்டும். ஜே.வி.பி. ஓர் அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளது. அதே ஜே.வி.பி.யின் அபிப்பிராயத்தையே எமது கட்சியில் சிலர் கொண்டிருக்கலாம். சிலர் வேறு ஒன்று தேவை என்கின்றனர். இவை கருத்துப் பரிமாற்றங்களாக சுழன்று வரவேண்டும். இவ்விடயத்தில் அரசு தெளிவான இறுதித் தீர்மானத்திற்கு இன்னும் வரவில்லை.

★ கே:- சிரேஸ்ட அமைச்சர் என்ற வகையில் இது பற்றிய உங்களின் கருத்து என்ன?

✪ ரட்ணசிறி:- எனது தனிப்பட்ட கருத்தை நான் இங்கே சொல்வது முறையற்றது அல்லவா?

★ கே:- இல்லை. இந்த விடயத்தில் சிரேஷ்ட அமைச்சர் என்ற வகையில் உங்கள் நிலைப்பாடு என்ன? இந்த ஏற்பாட்டைச் செய்யலாமா அல்லது கூடாதா என்பது தொடர்பாக உங்களின் கருத்தையே கேட்கிறேன்.

✪ ரட்ணசிறி:- இதில் ஒரு புறத்தைப் பார்த்தால்- ஒரு பிரதேசத்திற்கு மட்டும் இப்படியொன்றைச் செய்வது அவசியமேயல்ல என்பது புரியும். தெற்கில் ஒருவிதமாகவும், அதேபோல் ஏனைய இடங்களிலும் செய்வதாயின் இங்கே மட்டும் ஏன் வேறுவிதமாகச் செய்யவேண்டும்? எனவே, இது ஏன் என்று அவர்கள் கேட்கலாம். மிகவும் நன்றாகச் சிந்தித்த பின்னரே இந்தச் செயலில் இறங்கவேண்டுமென்றே நான் நினைக்கிறேன். இறுதித் தீர்வுக்குச் செல்லும் வழிவகையைப் பார்த்த பின்னரே இதனைச் செய்யவேண்டும். எனவே, இறுதித் தீர்வு குறித்து முதலில் பேச வேண்டும். பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு படிப்படியாகச் செய்யப்பட வேண்டியது. இறுதித் தீர்வு பற்றி பேசாமல் இதனைச் செய்வது முறையல்ல.

★ கே:- ஆனாலும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் 99 வீத முன்னேற்றம் ஏற்பட்டு விட்டதாக எரிக் சொல்ஹெய்ம் கூறுகின்றார். அப்படி கட்டமைப்பு உருவானால் அரசிலிருந்து வெளியேறுவோமென ஜே.வி.பி. கூறுகின்றதே?

✪ ரட்ணசிறி:- சொல்ஹெய்ம் ஐயா அவர்கள் நூறுதடவைக்கும் மேலாக இலங்கை வந்துள்ளார். இப்படி அவர் இங்கு வந்தபோதெல்லாம் அவர் எல்லாம் சரியென்று தானே கூறியிருக்கின்றார்! அப்படித்தானே சொன்னார் இன்னும் அதைத்தான் கூறுகின்றார். அவ்வளவுதான்.

★ கே:- என்றாலும் இந்த விடயம் நடைமுறைக்கு வந்தால் ஜே.வி.பி. அரசிலிருந்து வெளியேறி அரசு கவிழும் நிலை உருவாகாதா?

✪ ரட்ணசிறி:- இந்த நிலைமையை உருவாக்குவதற்கான பொறுப்பு அரசிடம் தானே இருக்கிறது? ஆனால், அந்த நிலைமைக்கு அரசு தள்ளப்படமாட்டாது. அரசு கவிழ்வதில்தான் பிரச்சினைக்குத் தீர்வு இருக்கிறதா என்பதை அரசே தீர்மானிக்கவேண்டும். எனவே, இவற்றையெல்லாம் நான் கணக்கெடுக்கப்போவதில்லை.

★ கே:- ஆழிப்பேரலை அனர்த்தம் இடம் பெற்று நான்கு மாத காலமாகிறது. இதனால், பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு பகுதிமக்களுக்கான நிவாரண மீள்கட்டுமான நடவடிக்கைகளை அரசு எப்படிச் செய்யப்போகிறது?

✪ ரட்ணசிறி:- அரசு இவ்வளவு காலம் அங்கு எப்படி நடவடிக்கைகளை மேற்கொண்டது? ஆழிப்பேரலை ஏற்படுவதற்கு முன்னர் அங்கு அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவில்லையா? அங்கு செலவிடப்பட்ட நிதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை நாம் பட்டியலிட்டுக் காட்டலாமே. கட்டமைப்பொன்றை ஏற்படுத்தியா அவற்றை எல்லாம் செய்தோம்? பிரதேச செயலாளர்கள், மாவட்டச்செயலாளர்கள், ஆளுநர் ஊடாகவே நாம் இவற்றைச் செய்தோம். அங்கு ஒரு கட்டமைப்பு ஏற்கனவே இருக்கிறது. அமைச்சர்கள் இல்லாவிடினும் செயலாளர்கள் அங்கு இருக்கின்றார்கள். அவர்கள் ஊடாகச் செய்யலாம்.

- என்றார் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க.

அவர் விரிவாக வழங்கிய பேட்டி பின்னர் உதயனில் பிரசுரமாகும். (எ-க)

## எரிக் சொல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு மக்களின் துன்ப துயரங்களை வெளிப்படுத்திக் காட்டுவதில் அப்பிரதேசத்தின் ஏனைய தமிழ் எம்.பிக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் செய்யத்தவறிய விடயத்தைத் தாம் செய்கின்றனார் என்று தெரிவித்து - இந்தக் கடிதத்தை அவர் வரைந்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அடக்குமுறையின் கீழ் தமிழர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள் எனத் தெரிவித்து. புலிகளுக்கு எதிராக அக்கடிதத்தில் வசைமாரி பொழிந்துள்ள சங்கரியார், எரிக் சொல்ஹெயம் குறித்து அதில் கூறியிருப்பதாவது:-

திருப்திதரும் தீர்வைக் காண்பதற்கான முயற்சியாக அரசையும், புலிகளையும் பேச்சு மேசைக்கு அழைத்துவரும் பொறுப்பை நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஏற்றபோது எல்லோரும் சந்தோஷப்பட்டனர்.

அனுசரணையாளராகத் தமது பணியைத் தொடங்கிய எரிக் சொல்ஹெய்ம் மெல்ல மெல்ல மத்தியஸ்தராக அப்பொறுப்பை மாற்றிக்கொண்டார். எனினும் நான் அதனையும் வரவேற்றேன்.

அவரது பாதையில் அவர் எதிர்கொண்ட தடைகள், சஞ்சலங்கள் தரும் தொல்லைகள் போன்றவற்றை நான் அறிவேன்.

ஒரு நாள் நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினர் சொல்ஹெய்மைத் தாறுமாறாகத் தாக்கிப் பேசிய போது, நாடாளுமன்ற கலரியில் சொல்ஹெய்ம் இருப்பதை அந்த உறுப்பினருக்கு சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க நினைவூட்டவேண்டியவரானார். அச்சமயம் அரசின் முன்வரிசை உறுப்பினர்கள் சொல்ஹெய்மிற்காகக் குரல் எழுப்பத் தவறியபோது, எதிர்க்கட்சியில் இருந்த நான் அவருக்காகப் பேசி நாட்டின் சார்பில் அவரிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினேன்.

ஆனால், இப்போது சொல்ஹெய்ம் தன்னுடைய மத்தியஸ்தர் நிலையிலிருந்து வழுவி - தமிழ்மக்களின் கஷ்டங்களைக் கவனத்திலோ, சிரத்தையிலோ கொள்ளாது - விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக, பக்கச்சார்பாக நடக்கிறார் என நான் நம்பவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

தமிழர்களின் ஜனநாயக மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான அபிலாஷைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அவரின் பங்கு, பணி அமைவதாகவே எனக்குப்படுகிறது.

மூன்றுவருட யுத்தநிறுத்தம் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியதாக எரிக் சொல்ஹெய்ம் அண்மைய அறிக்கை ஒன்றில் பீற்றிக் கொண்டுள்ளார். அது உண்மைதான். ஆனால், அது (யுத்தநிறுத்தம்) வடக்கு - கிழக்கில் தமிழர்களினுடைய அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுக்கவும் வழிசெய்துள்ளது.

புலிகளின் பிடியில் இருந்து தமிழர்களை விடுவிக்கும் பொறுப்பு இப்போது சர்வதேச சமூகத்தின் கைகளில்தான் தங்கியுள்ளது - என்றுள்ளது. (எ-க)

## கடலிலும் எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்காரணமாக இருதரப்புக்கும் இடையில் அடிக்கடி கடற்பயணங்கள் குறித்து முறுகல் நிலைஏற்பட்டது.

இந்நிலையைத் தவிர்ப்பதற்காக படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் நடமாட்டத்தை உறுதிசெய்யும் வகையில் எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

இதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக கண்காணிப்புக் குழு தெரிவித்தது. (எ-க-3-155)

## கஞ்சிக்குடிச்சாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் என்று 'தமிழ்நெற்' தெரிவித்தது.

கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் உள்ள தமது முன்னணி நிலைகள் மீது இரண்டு நபர்கள் வியாழக் கிழமை காலை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் -

அதில் தங்கள் தரப்புக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை என்றும் - அந்தத் தளபதி 'தமிழ்நெற்' இணையத்தளத்திற்கு மேலும் தெரிவித்துள்ளார். (எ-க-190)

GROUP CLASS
கணித, விஞ்ஞான பாடங்களிற்குரியது
A L 06 & 07
முதன்முறையாக நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்களால் நடத்தப்படும்.
தொடர்புகட்கு : FRI. - MON. 6-8 p.m.
CHEMISTRY CENTRE
Temple Rd.
(Green Park முன்னே)

## மேதின ஏற்பாடு குறித்த கலந்துரையாடல்

வடமராட்சியில் மேதின ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த வர்த்தக நிறுவனங்கள், பொது அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-3-70)

## மேதின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மேதினப் பேரணி ஒழுங்கு தொடர்பான கலந்துரையாடலின் போது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் இயங்கும் பொது அமைப்புகள், கல்விச்சமூகம், சிகை அலங்கரிப்பு ஒப்பனையாளர் சங்கம், வணிகர் கழகம், விளையாட்டுக்கழகங்கள், தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல் யாழ். மாவட்டப் பொது அமைப்புகள் ஒன்றியத்தின் தலைவர் சு.சிறில் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்மக்களின் தமிழ்த் தேசியஅபிலாஷைகளை பிரதிபலிக்கும் வகையில் கூட்டுறவுத்துறை, அரசதுறை, கல்விசார்துறை, வங்கித்துறை, தனியார்துறை, தொழிற்சங்கங்கள், பொது அமைப்புகள், சனசமூக நிலையங்கள், மாதர் அமைப்புகள், போன்றன ஒன்றிணைந்து முன்னெப் போதுமில்லாதவாறு மேதினநிகழ்வுகளை முன்னெடுப்பது என்றும் -

தமிழ்த் தொழிலாளர்களுடைய விடிவிற்கும், வாழ்வுக்கும் எமது நாட்டின் விடிவுதான் வழி சமைக்க முடியும் என்றநம்பிக்கையுடன் - உணர்வுடன் குடாநாட் டின் அனைத்து மக்களும் துறைசார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகளும் தங்கள் உணர்வுகளினதும் பிரதிபலிப்பினை ஊர்திகளாகவும், கோஷங்களாகவும் வானுயர எழுப்பி ஊர்வலத்தில் அணிதிரள வேண்டும் என்றும் - கோரிக்கை விடுப்பது என்றும் - கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மக்களை அணிதிரட்டும் பணியில் தேசிய எழுச்சிப் பேரவை ஈடுபடும் என்றும் - கூறப்பட்டது.

இம்முறை பேரணியில் அரச திணைக்களங்களையும் இணைத்து நடத்தவது எனவும் - தீர்மானிக்கப்பட்டதாக் கூறப்பட்டது. (எ-7)


## இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுள் விடுமுறையில் சென்று திரும்பாதவர்கள் மற்றும் இராணுவத்தை விட்டு ஓடியவர்கள் ஆகியோரும் அடங்குவர்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவரவர் சம்பந்தப்பட்ட படைப்பிரிவுகளுடன் தொடர்புகொண்டு தமது சட்டபூர்வ விடுகைப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (எ-க)

BIT Bachelor of Information Technology
கல்வியாண்டு 2005/2006
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மேற்படி வெளிவாரிப் பட்டக்கல்விக்கான தெரிவுப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
➤ இவ்வாண்டில் கற்கை நெறி முழுநேரமாகவும் பகுதி நேரமாகவும் ஆரம்பிக்கப்படவுள்ளது
➤ இக்கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள்
➤ A/L 2005 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களும் இத் தெரிவுப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.
BIT கல்விக்குத் தனித்துவம் மிக்க HS உடன் இணைந்து கணனிப் பட்டதாரியாகும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna
T.P. 021 222 8060

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.